# சிரித்திரன்




CHIRITHIRAN

A CARTOON MAGAZINE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருத்தி: "அந்த மணமகனுக்கு மானம் மரியாதையென்பது தெரியாது போலும். மணவறையில் மணப் பெண்ணையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்."

மற்றவள்: "மணமகனென்ன, வந்த சபை யோரே மணப்பெண்ணை மெய் மறந்துதான் பார்த்துக்கொண் டிருந்தார்கள். மணப்பெண் அணிந்திருந்த நகைகள் அவ் வளவு கவர்ச்சி. எல்லா நகை களும் லலிதா ஜுவலறியில் தான் வாங்கப்பட்டன."





## உங்கள் அழகை அழகுபடுத்த இன்றே விஜயம் செய்யுங்கள்

↓

# லலிதா ஜுவலறி

உரிமையாளர்: செல்லையா இந்திரசித்து

இல. 133, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# * முகூர்த்த முறுவல் *



ஒருவர்: உத்தியோகம் இல்லாதவனுக்கு உன் மகளை ஏன் திருமணம் செய்துகொடுத்தாய்?

மற்றவர்: மாப்பிளைக்கு அதிர்ஷ்ட லாபச்சீட்டில் முதல் பரிசு கிடைக்குமென்று சோதிடர் சொல்லியிருக்கிறார்.

*

ஒருவர்: என்ன தம்பி கையில் தூரதிருஷ்டிக் கண்ணாடி?

மற்றவர்: எனக்கு இன்றைக்குக் கல்யாணம்...... அருந்ததி நட்சத்திரத்தைப் பார்ப்பதற்கு.

*

மணமகன்: (முதலிரவில்) கண்ணே! என்ன மௌனம் சாதிக்கின்றாய்?

மணமகள்: பஸ் நிலையத்திலும், பூங்காவிலும், கடற்கரையிலும், தியேட்டரிலும் பேசி முடித்துவிட்டோம். இனி என்னத்தான் பேச இருக்கிறது?

*

மணமகன்: (முதலிரவில் தனது மனைவியிடம்) கண்ணே! முதல் முதல் நீ என்னிடம் என்ன கேட்க விரும்புகிறாய்?

மணப்பெண்: அத்தான்! முதல் முதல் ரிலீசாகிற படத்திற்கு முதல் காட்சிக்கு முதலில் நின்று டிக்கட் எடுத்து முதல் வகுப்பில் இருத்திப் படம் காட்ட வேணும்!

*



மணமகள்: முன்பெல்லாம் தினமும் கோவிலுக்குப் போவீர்களே. இப்போது ஏன் போவதில்லை அத்தான்?

மணமகன்: முன்பெல்லாம் உன் வீடு கடந்துதானே கோவிலுக்குச் செல்ல வேண்டும். இப்போது தான் நானே உன் வீட்டிற்கு வந்துவிட்டேனே!

*

Mrs. டாமோடிரன்



Mrs. டா: டார்லிங்! ஹூ இஸ் சேதுராமன் பிறதர்ஸ்?

Mr. டா: யூ டோன்ற் நோ அவர் இன்டியா. அது இன்டியாவிலே பெரிய பிஸ்னெஸ் கம்பெனி. அவங்க ஆயில் மில் முதலாளிகள்.

Mrs. டா: இஸ் இட் சோ. தாங் யூ டாலிங்.

"சிரித்திரன்"
அடுத்த இதழ்:
'ஆண்டு மலர்'
அதிக பக்கங்கள்!
நிறைந்த எழுத்தோவியங்கள்!!
விலை: ரூ. 1-00

சிரித்திரனில் வெளியாகும் கதை, கட்டுரை, நாடகங்களில் வரும் பாத்திரங்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.

தனிப்பிரதி --45
ஆறுமாதச் சந்தா--3-25
வருடச் சந்தா--6-50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிவேலில் அமிர்தகானம்

ஆழ்கடலைத் தாண்டி அற்புத இசையாம் ஆனந்த பைரவியை அண்ணன் தம்பிகளான மதுரை சேதுராமன், பொன்னுசாமி ஆகியோர் ஆடிவேல் விழாவில் அன்பர்கள், ஆதரவாளர்கள் அருமை ரசிகர் ஆகியோருக்கு அன்பாகப் படைத்தார்கள்.

இவர்களுக்கு இத்தனை பெருமை வந்துவிட்டதேயென ஏனைய கலைஞர்களுக்கு இவர்கள் மேல் பொருமை இருப்பதில் சந்தேகமில்லை, ஏனெனில் காரைக் குருச்சி, ஷேக் சின்ன மௌலானா சாஹிப், இன்னும் பலதிறப்பட்ட நாதஸ்வரக் கலைஞர்கள் வாசித்துப் பெருமை பெற்ற மேடை, இவர்களால் அன்று உடைந்து தரைமட்டமானது. இதற்குக் காரணம் அவர்களது அமுத இசையில் பாமரர்கள், பண்டிதர்கள், எல்லோருமே தங்களை மறந்ததுதான்.

தில்லானா மோகனாம்பாளில் இவர்களது இசையைப் பருகிய மக்கள், அதே இசையை உயிருள்ளதாக, உன்னதமான தொனியில் நேர்முகமாகக் கேட்டதால் என்ன செய்வதென்றறியாமல், இவர்கள் இருவரையும் கட்டித் தழுவி முத்தம் செய்யவும் முற்பட்டார்கள்.

எந்தக் கலைஞனுக்கும் சினிமாதான் பெரும் பிரச்சார ஸ்தாபனமாக விளங்குகின்றது. ஏனெனில் தில்லானா மோகனாம்பாள் என்ற சினிமா நமது நாட்டிற்கு வராதிருந்தால் அதில் வாசித்திருந்த சேதுராமன், பொன்னுசாமி சகோதரர்களை யாருக்குத் தான் தெரிந்திருக்கும். இதற்கு ஆதாரமாக இதே சகோதரர்கள் 1958-ம் ஆண்டு ஈழத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கிருக்கும் மதிப்பும், மரியாதையும் அவர்களுக்கு அன்றிருக்கவில்லை. ஆனால் அன்றும் மதுரை சேதுராமன் பொன்னுசாமி சகோதரர்கள். இன்றும் அதே சகோதரர்கள் தான். ஆனால், நாம் தான் மாறிவிட்டோம். நமது ரசனை தான் மாறிவிட்டது.

ஆரம்ப நாளில் மக்கள் அநேகமாகக் கூடவில்லை. அதனால் தான் என்னவோ அன்புச் சோதரர்கள் அளவோடு தங்கள் நாதஸ்வரக் கச்சேரியை நிறுத்திவிட்டார்கள். அடுத்த நாள் கச்சேரியை அதற்கு நேர் விரோதமாக நவரசக் கன்னடவுடன் ஆரம்பித்து, காம்போதி ராக ஆலாபனையுடன், பல்லவி ராகமாலிகையை அற்புதமாக வாசித்தார்கள். இடையே ஸ்லோகம் போன்ற முறைகளால் மக்கள் கூட்டத்தைத் தங்கள் மதுர இசையில் கவனம் செலுத்தவும் செய்துவிட்டார்கள். இத்தனை பெருமைகளால் அவர்களை நாம் மக்கள் கலைஞர் என்று கூறிக் கொள்ளத்தான் வேண்டும். அளவோடு அற்புதமாக, அண்ணன் தம்பி இருவரும் இணைந்து ஒற்றுமையாக வாசிப்பதே இவர்கள் இசைக் கச்சேரியிலுள்ள பெருமை. இத்தனைக்கும் நமது இசை ரசிகர்களுக்கு இவர்களது "நலம்தானா", "ஆயிரம் கண் போதாது", "நகுமோ முக்கனலோ", "காமகரிகரிகபனா" என்பவைகளே இதயத்தில் நிலையாய் நிற்கின்றது. ஆகவே, நாம் அவர்களை "நலம்தானா" என விசாரிக்கும் வரை நலமுடன் இருக்க நமது வாழ்த்துக்கள்.

"ஆபேரி"



ஆடிவேலில் நாதஸ்வரக் கச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பரிசுக் கேள்வி

எஸ். மகேந்திரநாதன், 25, ஈச்சமோட்டை கடற்கரைவீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்,

கே: இன்னும் சில வருடங்களில் யாழ்ப்பாணத்து கிணற்று நீரெல்லாம் உப்புத் தன்மையாகிவிடப் போகிறதாமே!

ப: உண்மை தம்பி! சீதனமில்லாததால் திருமணமாகாத பெண்கள் சிந்திக்கொண்டிருக்கும் கண்ணீர் யாழ்ப்பாணத்து மண்ணிலே ஊறிக்கொண்டிருக்கிறது.

ஜெ. சின்னத்தம்பி, 3/2, மேபீல் வீதி, கொழும்பு-13.

கே: பொறுமைக்குப் பூமியை உதாரணமாகச் சொல்கிறார்களே. ஏன்?

ப: மண் ஆசை வெறுத்த துறவிகளையும் தாங்குவதால்.

ஃ

பத்மா, யாழ்ப்பாணம்.

கே: மகுடியாரே! சதா பெண்களைப் பற்றி கேள்வி கேட்கும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: பெண்களைப் பற்றிய பயத்தால் கேள்விகள் எழுகின்றன போலும்.

ஃ

செ. அடைக்கலம், இளநகர், சேமமடு.

கே: நூறு பிள்ளைகளின் தந்தை குடும்பக் கட்டுப்பாட்டு மகாநாட்டின் தலைவராக இருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் மகுடியாரே!

ப: இறைச்சி சாப்பிடுபவனுக்கு சைவ ஹோட்டல் நடத்தத் தெரியாதா என்ன?

ஃ

ஆ. இரத்தினசிங்கம், சிவன் கோவில் வீதி, காரைநகர்.

கே: உதட்டில் 'லிப்ஸ்டிக்' பூசிக் கொண்டு கோவிலுக்கு வரும் பெண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

ப: செவ்வாயால் செம்மனச் செல்விகள் ஆண்டவனைச் சேவிக்க வருகிறார்கள்.

ஃ

ஜே. எப். சேகர், 'யேசு வாசா', வீமன்காமம், தெல்லிப்பளை.

கே: நீதிமன்றத் தீர்ப்புக்கும், ஈற்றில் கடவுளால் வழங்கப்படும் தீர்ப்புக்கும் உள்ள பேதம் என்ன?

ப: அது மனித சாட்சியைப் பொறுத்தது. இது மனச் சாட்சியைப் பொறுத்தது.

ஃ

ஏ. செபஸ்ரியன், 8/4, சென்றலிஸ்ற் றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

கே: தன்னிடம் உள்ள பணத்தை வட்டிக்குக் கொடுத்துவிட்டு தான் கொடுக்க வேண்டிய கடனுக்குத் தனது நகையை வட்டிக்கு ஈடு வைத்துக் கடனைத் தீர்ப்பவரைப் பற்றி தங்கள் கருத்து...?

ப: ஓட்டைப் பானையில் தண்ணீர் சுமந்த கதை தம்பி!

ஃ

எஸ். துரைராசா, அன்னமலை, கல்முனை.

கே: ஒரு நாடக நடிகருக்கும், பட நடிகருக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: முந்தியவர் கூத்தாடி. பிந்தியவர் நட்சத்திரம்.

ஃ

எம். கே. செல்வரத்தினம், புகையிரத நிலையம், நாவற்குளி.

கே: இக்காலப் பெண்கள் அதிகமாகக் கோவிலுக்குச் செல்வதேன்?

ப: பார்ப்பதற்கு நல்ல படங்களில்லாவிட்டால் கோவிலுக்குப் போகாமல் வேறு எங்கு போவதாம்?

ஃ

வேல்விழி சிவம், பண்ணாகம்.

கே: விதி என்பது என்ன?

ப: மதி இல்லாதவனின் கூடாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. சிவராசா,** புது ரோட், காரைநகர்.

கே: மகுடியாரே! நீர் ஆண்டவன் சந்நிதானத்தில் மனதை ஒருமுகப்படுத்தி வணங்குவீரா?

ப: கவர்ச்சி நடிகைகளின் காபன் கொப்பிகள் கோவிலில் நடமாடும் பொழுது எப்படி ஐயா என் மனம் ஆண்டவனில் நாட்டம் கொள்ளும்.

ஃ

**நெல்லை ஐ. நடேஸ்,** நெல்லியடி.
**எம். எஸ். ராஜ்,** 40/5, வில்கொட, குருநாகல்.

கே: தென் இந்தியச் சினிமாவுக்கும் ஈழத்துச் சினிமாவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: தென் இந்தியப் படங்களுக்கு ஆயுள் கூட. ஆனால் உலகப் பரிசு பெற்றதில்லை. ஈழத்துப் படங்களுக்கு ஆயுள் குறைவு. ஆனால் உலகப் பரிசுகள் பெற்றிருக்கின்றன.

ஃ

**எம். எஸ். ராஜ்,** 40/5, வில்கொட, குருநாகல்.

கே: பருவ மங்கை கடைசி வரை காத்திருப்பது எதற்காக?

ப: கோவில் திருவிழாக்களில் காப்பு வாங்குவதற்காக.

ஃ

**க. செல்வராசா,** வீரபத்திரர் கோவிலடி, அல்வாய் வடக்கு, அல்வாய்.

கே: மகுடியாரே! பேய், பிசாசு, சூனியம், செய்வினை என்பவற்றை நீர் நம்புகிறீரா?

ப: நம்புவதில்லை என்று கூறினால் எனக்குச் சூனியம் செய்துவிடுவார்கள்.

ஃ

**எஸ். ஜீவானந்தம்,** 27, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை.

கே: தாரத்தைவிட தாயை பெரிதாக நினைப்பவனை எதனோடு ஒப்பிடலாம்?

ப: கடவுளோடு ஒப்பிடலாம்! ஏனெனில் தாரம் விவாகரத்துக் கோருவாள். தாய் எந்த ரத்தும் செய்யமாட்டாள்.

ஃ

**சோ. பாலச்சந்திரன்,** நீர்வை.

கே: மகுடியாரே! நீர் உம்மைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

"இதோ இன்னும் முப்பது விநாடியில் சந்திரமண்டலத்தில் வீரர்கள் அடியெடுத்து வைக்க.... டப்--டுப்--கிர்--ப்ட்--கிர்ர்....கிர்...ர்ர்ர்ர்..............."

தக்க தருணத்தில் வானொலி பழுதாகிவிட்டதா? கவலை வேண்டாம்!
இருக்கவே இருக்கிறது

"றேடியோஸ் பதி"

எவ்விதமான வானொலிகளென்றுலென்ன, கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகளென்றுலென்ன குறைந்த செலவில் நீடித்த பாவனைக்கேற்ப திருத்தித் தருபவர்கள்

றேடியோஸ் பதி

திருத்தம் செய்த பொருட்களுக்கு ஒரு வருட உத்தரவாதம் உண்டு.

Radios Pathy
40, KASTHURIYAR ROAD, JAFFNA

றேடியோஸ் பதி

40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப: என்னைப் பொறுத்தளவில் என் வாழ்க்கை வெற்றி. ஆனால் என் உற்றார் உறவினரைப் பொறுத்தளவில் என் வாழ்க்கை பெருந் தோல்வி.

ஃ

நெல்லை ஐ. நடேசு, நெல்லியடி, கரவெட்டி.

கே: மகுடியாரே! உமக்கு மந்திரத்தால் மாங்காய் விழ்த்தத் தெரியுமா?

ப: அது தெரிந்திருந்தால் மாம்பழ வியாபாரம் அல்லவா செய்து கொண்டிருப்பேன்.

கே: தமிழன் என்றொரு இனமுண்டா?

ப: சகல விண்ணப்பப் பத்திரங்களிலும் சிங்கள, ஆங்கிலப் பகுதிகள் நிரப்பப்பட்டிருக்கின்றன. தமிழ்ப் பகுதி வெற்றிடமாக இருக்கின்றது. எனவே தமிழன் என்றொரு இனமில்லை.

கே: வாழ்க்கை என்ற நாடகத்தில் தங்களின் பாத்திரம் என்ன?

ப: தேர்தல் காலத்தில் ராஜா! மற்றுங் காலத்தில் கூஜா!

ஃ

ஜெ. விக்னேஸ்வரி, 276, கண்டி வீதி, தெலியாக் கொன்னை, குருநாகல்.

கே: உலகில் எந்த விதக் குற்றமும் செய்யாமல் அடிபட்டுக் கொண்டிருப்பது எது?

ப: தேங்காய்!

ஃ

எச். எம். எல். சலாம், மட்டுநகர்.

கே: இட்டார் பெரியோர். இடாதோர்......?

ப: அடை கிடப்போர்.

வே. மார்க்கண்டு, கண்டி வீதி, முறிகண்டி.

கே: உள்ளத்தில் தைரியம் உள்ளவனுக்கும் உடம்பில் தைரியம் உள்ளவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: உள்ளத்தில் தைரியம் உள்ளவன் போர்க்களத்தில் வீரத்தைக் காட்டுவான். உடலில் தைரியமுள்ளவன் மேடையில் சாண்டோ விளையாட்டுக் காட்டுவான்.

ஃ

க. அருள்சோதி, அல்லைப்பிட்டி மேற்கு.

கே: பெண்களை பூங்கொடி, கோவைப் பழம் என்று வர்ணிக்கிறார்களே! ஆண்களைப் பற்றி ஏன் அப்படி வர்ணிப்பதில்லை?

ப: பூவைத்தான் வர்ணிப்பது. வண்டை அல்ல.

கே: ஆட்சிக்குத் தேவை ஆண்களா?

ப: உலகில் மூன்று நாடுகளில் கச்சிதமாகப் பெண் பிரதமர்கள் ஆட்சி செலுத்தும் காலத்திலா இந்தக் கேள்வி.

ஃ

ஆ. ஞானசேகரம், புத்தூர் கிழக்கு, புத்தூர்.

கே: மகுடியாரே! ஒருவர் பொறுமையுடையவரா அல்லது பொறுமை இல்லாதவரா என்பதை எங்கே அறியலாம்?

ப: கியூ வரிசையில்!

ஃ

ஏ. பி. சண்முகராஜா, கிரண்பாஸ், கொழும்பு-14.

கே: மகுடியாரே! பணத்திற்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

ப: பணத்திற்கு வட்டி வளரும். மனிதனுக்கு வயது வளரும்.

எம். அமீர், அக்கரைப்பற்று-6.

கே: எனக்குப் படிக்கும் போது தூக்கம் வருகிறது. இதனால் படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. இது ஏன்? இதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: கல்வியைக் காதலியும். காதலுக்குத் தூக்கமேது?

ஃ

செல்வி க. இலட்சுமி, சென் செபஸ்தியன் வீதி, கொழும்பு-12.

கே: வாழ்க்கை முன்னேற்றமடைவதற்கு எது முக்கியம்?

ப: அண்ணன் உதவி செய்வான், அயலான் உதவி செய்வான், ஆண்டவன் துணை புரிவான், அதிஷ்ட லாபச் சீட்டில் பரிசு கிடைக்கும் என்றெல்லாம் கற்பனையில் சஞ்சரிக்காது அயராது நீ உழைக்க வேண்டும்!

ஃ

ஏ. ஹஸன்பே, யாழ்ப்பாணம்.

கே: உலகத்தில் யாரை நம்பலாம்?

ப: நிலைக் கண்ணாடியில் தெரியும் பிம்பத்தை.

ஃ

எம். ஜி. சேவியர், மன்னார்.

கே: உண்மைக்கு இன்று மதிப்புக் கிடைக்குமா?

ப: உண்மைக்கு உதை கிடைக்கும். பொய்க்குப் பொன் கிடைக்கும்.

ஃ

எம். குலசேகரம், கோப்பாய்.

கே: கடவுளின் சிலை சந்திகளில் நிறுவுவதைப் பற்றி உமது அபிப்பிராயம் யாதோ?

ப: மனிதர்களைத் தான் சந்திக்கு இழுக்கிறார்கள். கடவுளையுமா இழுக்க வேண்டும்?

5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர்................................ விலாசம் ..........................................

வயது:...................... ..........................................

(மாதமொரு முறை)

**இடமிருந்து வலம்**

1. சூரியனின் மறு பெயர்
3. புகழ்
5. ஒரு நட்சத்திரம்
6. சலசூத்திரம்
8. மங்களம்
9. இராமனைக் காட்டுக்கனுப்ப ஏதுவாக இருந்தவள்.
11. ஆடிப் பிறப்பன்று பெண்கள் —— அடித்துக் கொண்டாடுவார்கள்
12. ஓர் கொடி
13. மாதம்
19. உயர்ச்சி
20. ஓர் தலைப்பட்டினம்
21. கனவு

**மேலிருந்து கீழ்**

1. திட்டு நிலம்
2. இலைக் கலம்
3. இசை
4. அழகு
9. சேரன் செங்குட்டுவனின் தம்பி
9. சென்னை மாநகரில் [உள்ள நதி
10. சீதா பிராட்டியார்
14. ஒளவையார் எழுதிய நீதி நூல்.
15. சரித்திரம்
16. வில்
17. குதிரை
18. தேன்

**பகுத்தறிவுப் போட்டி நிர். 4**

## போட்டி நிபந்தனைகள்

1. ஒருவர் எத்தனை கூப்பன் அனுப்ப விரும்பினாலும் நிரப்பி அனுப்பலாம். அவைகள் அனைத்தும் சிரித்திரனில் வெளிவந்த வைகளாக இருக்கவேண்டும்.

2. கூப்பன்களுக்கு கட்டணம் எதுவும் இல்லை. இலவசம்'

3. கூப்பன்கள் யாவும் குலுக்கப்பட்டு, முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சரியான விடைக்கே முதற் பரிசு அளிக்கப்படும். இரண்டாம், மூன்றும், நான்காம் பரிசுகளும் கூப்பன்களின் கிரமப்படி அளிக்கப்படும்.

4. முதற் பரிசு பெறுபவரின் புகைப்படம் அவர் விரும்பி அனுப்பினால், சிரித்திரனில் பிரசுரிக்கப்படும்.

5. போட்டியின் விடைகளும் பரிசு பெறுபவர்களின் பெயர் விலாசம் ஆகியன எதிர்வரும் மாத சிரித்திரனில் பிரசுரிக்கப்படும்.

6. விடைகள் அனைத்தும் தெளிவாக விளங்கும் வகையில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

7. ஆசிரியரின் தீர்ப்பே சரியானது.

8. போட்டிக் கூப்பன்கள் அனைத்தும் சாதாரண தபாலில் அனுப்பப்படவேண்டும். பிரதி மாதமும் 25ம் திகதி காலை 11 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக, சிரித்திரன் 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாண. என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

**சிரித்திரனை இலவசமாகப் பெறப்போகிறீர்கள்!**

**இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!**

முதற் பரிசு—சிரித்திரன் பத்திரிகை 16 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

இரண்டாம் பரிசு—சிரித்திரன் பத்திரிகை 12 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

மூன்றுவது பரிசு — சிரித்திரன் பத்திரிகை 9 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

நான்காவது பரிசு—சிரித்திரன் பத்திரிகை 6 மாதங்கள் அனுப்பி வைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பார்ந்த வாசகரே....

உங்கள் அபிமான 'சிரித்திரனு'க்கு ஏழு வயது முடிவடைந்து எட்டாவது வயது ஆரம்பமாகின்றது. அதனால், அடுத்த இதழை ஆண்டு மலராக வாசகப் பெருமக்களின் கரங்களில் தவழவிடவுள்ளோம். இந்த இதழ் அதிக பக்கங்களையும், அதிக விடயங்களையும் கொண்டு விளங்கும். ஈழத்தின் பிரபல எழுத்தாளர்கள் இந்த மலரில் எழுதுகின்றார்கள். இந்த மலரில் —

ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர் இரசிகமணி கனக செந்திநாதன் 'பெரிய மீன்' என்றொரு அருமையான சிறுகதையை எழுதியுள்ளார்; மனதில் நிலைத்து நிற்கக் கூடியது. வைத்திலிங்கம், காசி. ஆனந்தன், ஆ. பெனடிக்ற் ஆகியோரது சுவையான சிறு கதைகளும் இம்மலரில் இடம் பெறுகின்றன. 'செம்பியன் செல்வனி'ன் உருவகக் கதை ஒன்றும் இம்மலரினை அலங்கரிக்கின்றது. பொ. சண்முகநாதன், திக்கவயல் தர்மகுலசிங்கம், இணுவை தவசி, பிரமச்சாரி, ஆ. த. சித்திரவேல் ஆகியோரது நகைச்சுவைக் கதைகள் உங்களை நிச்சயம் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கக் கூடியன. செங்கை ஆழியான் புதுமையான நகைச்சுவை ஒன்றை உங்களுக்கு வழங்குகின்றார். யாழ்ப்பாணத்தின் 'ஒரே நதி'யான வழுக்கியாற்றில் ஐந்து நண்பர்களுடன் செய்த 'திகில்' நிறைந்த பிரயாணத்தை சுவைபடத் தருகின்றார். இன்னும் பல பிரபல எழுத்தாளர்களும் இம்மலரில் எழுதவுடன்பட்டுள்ளனர்; அவர்களது எழுத்தோவியங்களும் இடம் பெறும். அத்துடன்—

சிரித்திரன் சிறுகதை, சிரி கதைப் போட்டிகளில் பரிசு பெறும் கதைகளும் மலரைச் சிறப்படைய வைக்கவுள்ளன.

பக்கத்துக்குப் பக்கம் நகைச் சுவைகள்; சிரிக்க வைத்துச் சிந்திக்க வைக்கும் துணுக்குகள்! எல்லாவற்றுக்கும் சிகரம்போல 'மைனர் மச்சான்' ஆண்டு மலரில் இருந்து உங்களை மகிழ்விக்க வருகிறார்! உங்கள் பிரதியை தவறாது கிடைக்க இன்றே உங்கள் ஏஜண்டிடம் பதிவு செய்துகொள்ளுங்கள்.

— ஆசிரியர்

*


**SONY® 6R-29**

**சோனி 6R-29**

ரூபா 165/=

சோனி ரம்மியமானது—எடுத்துச் செல்வதில் ரம்மியமானது வைத்திருப்பதில் ரம்மியம்—ஏந்திக் கொள்வதில் ரம்மியம் பெற்றுக்கொள்வதில் ரம்மியம் சோனி 6R-29 ட்ரான்சிஸ்டர் சுபர் ஹெட்டேரோடைன் சேர்கியூட் கொண்டது.

**சீடில்ஸ் சினேரேடியோ 9-10 கொசிஸ்டரி கட்டிடம், கொழும்பு 11.**

**கிளைகள்: கண்டி, யாழ்ப்பாணம், கம்பஹா, பம்பலப்பிட்டி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் மட்டும் வாசிக்க........

# குத்து விளக்கு

பாபு: மிஸ்டர் சேகர்! வாழ்க்கையைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?

சேகர்: (சோகத்துடன்) வாழ்க்கை... யோவ்... என்னையா வாழ்க்கை... பணம் இல்லாதவனுக்கு வாழ்க்கை ஏது... இன்பம் ஏது... எல்லாம் நரகமையா...நரகம்...

பாபு: யோவ்... என்னையா இது... உங்கிட்டைப் பணமில்லேண்ணு பாங்கிலே பணமில்லேண்ணு அர்த்தமாய்யா? எதுக்கய்யா இப்படி கப்ஜா அடிக்கிறீரு...

சேகர்: நான் ஒண்ணும் கப்ஜா அடிக்கலே பாபு... எங்கிட்டைப் பணம் இருக்கு... உண்மைதான்... திடீரெண்ணு இந்தப் பணம் இல்லாமப் போயிடிச்சு... புயல் அடிச்சு எல்லாமே பறந்து போயிடிச்சு. இல்லே... நெருப்பிலே எரிந்து போயிடிச்சு... அப்புறம் இந்த உலகத்திலே எனக்கெண்ணு என்ன இருக்கு... உற்றார் வருவார்களா உதவி செய்ய, நண்பர்கள் வருவாங்களா கை கொடுக்க...... யாருடா பாபு வரப் போறுங்க...

பாபு: சேகர்... உனக்கு தலையிலே அடிச்சிடிச்சு...

சேகர்: இல்லே பாபு... உலகத்தைப் புரிஞ்சுகிட்டேன்... புரிய வைச்சுட்டாங்க...

பாபு: யாரு புரிய வைச்சிருக்கிறுங்க...

சேகர்: குத்து விளக்கெண்ணு ஒரு தமிழ்ப் படத்தை இலங்கையிலே தயாரிக்கிறுங்களே அவங்க புரிய வைச்சுட்டாங்கடா பாபு...

பாபு: அடிக்கிருன் சிக்ஸ்சர்... அடிக்கிருன் சிக்ஸ்சர்... டேய் அண்ணைக்குப் பாட்டைத் தான் ரேடியோவிலே கேட்டேன்... ரொம்ப நல்லாய் இருந்திச்சு... படம் எப்படா வந்திச்சு... நீ எப்படா பார்த்தாய்...

சேகர்: என் நண்பன் கூட சிலோன் தியேட்டர்ஸ் ஸ்ருடியோவுக்குப் போயிருந்தேன். அங்கே பார்த்தேன்டா பாபு... இயற்கையான நடிப்பாலே உள்ளத்தை உருக்கி எடுக்கிருரு ஒருத்தர்... அவரு பேரு பேரம்பலமெண்ணு சொன்னுங்க. அவருக்கு ஈடு கொடுத்து நடிச்சிருக்கிருரு ஒரு அம்மா. இரண்டு பேரும் கண்களிலே கண்ணீரை வரவைச்சுட்டாங்கடா...



பாபு: அளவுக்கு மீறிப் புகழுருய் போல இருக்கு...

சேகர்: இல்லேடா பாபு... நிச்சயமாக இல்லே... இலங்கைத் தமிழ்ப் பட வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயத்தையே உருவாக்கப் போறுங்க வி. எஸ். ரி. பிலிம் சார்... பெண்கள் கூட்டமே திரண்டு வரப்போகுது குத்து விளக்குப் பார்க்க...

பாபு: ஆமா... ஏதோ வேதாந்தம் பேசினுயே...அதுக்கென்னடா அர்த்தம்...

சேகர்: ஏழையள் படுற பாட்டைப் பார்க்கப்போ வேதாந்தம் தான் வருது... அதுவும் வாழ்ந்து கெட்ட ஒரு குடும்பத்தின் கதையை குத்து விளக்கிலே ஒவ்வொரு கோணத்திலேயும் சித்தரிச்சிருக்கிற அழகு... டேய்... இருக்கிற சொத்தெல்லாத்தையும் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து நானும் ஒரு ஏழையாகிடணும்ணு எண்ணத்தை உண்டாக்கிடிச்சு குத்துவிளக்கு...

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'காற்சட்டை போட்ட உத்தியோக மாப்பிள்ளைதான் வேண்டும்' என்று தமது வாழ்வையே சீரழித்துக் கொள்கின்ற இன்றைய இளம் பெண்களின் பிரதிநிதியாக —**

# ஒழிப்பு

— க. பாலசுந்தரம் —

''எனக்கு உந்த மாப்பிளே வேண்டாம். தோட்டக்காரக் கந்தசாமியைக் கட்டுறதிலும் நான் இப்படியே இருக்கிறன். உங்களுக்குப் பாரமெண்டால் சொல்லுங்கோ. ஒரு சொட்டுப் பொலிடோல் போதும்.''

நவமணி பொலிடோலைத் துணைக்கிழுத்துத் தகப்பன் கணபதிப்பிள்ளையை வெருட்டித் தோட்டக்காரனுகிய மச்சான் கந்தசாமியை விவாகம் செய்யப் போவதில்லை என்று கூறிவிட்டு, தந்தையின் பதிலுக்குக் காத்திராமல் கிணற்றடிக்குக் குளிக்கப் போனுள்.

அக்கிணற்றடிக் கிடுகு வேலிக்குத் தெற்கே, கந்தசாமியின் தாய் பூரணத்தின் வளவுக்குள் நின்ற இலந்தை மரம் பழுத்துப் பூரித்து நின்றது.

நவமணி கிணற்றடிக்குச் சென்றதும், அதுவரை ஒன்றுமே பேசாதிருந்த நவமணியின் தாய் இராசம்மா கணவனேடு கதை கொடுத்தாள்.

''உங்களுக்குச் கொஞ்சமாவது மூளையிருக்கோ? குமர்ப்பிள்ளையளோடை உப்பிடி நெத்திக்கு நேரே கதைக்கிறதோ? அவள் எஸ். எஸ். சி. பாஸ் பண்ணிப் போட்டிருக்கிருள். போயும் போயும் அவளை உங்கடை அக்காவின்ரை கரிமுண்டத் தோட்டக்காரனுக்கோ செய்து கொடுக்கப் பார்க்கிறியள். உங்கடை மருமோனுக்குத் தோட்டங் கொத்தவும், பாட்டுப் பாடவும் தெரியுமே ஒழிய வேறென்ன தெரியும். நான் உந்தக் கல்யாணத்துக்கு விடமாட்டன்.''

இராசம்மாவின் எதிர்ப்பை அரைக் காதால் கேட்டபடி, கணபதிப்பிள்ளை தெற்கே கிடுகு வேலிக்கு மேலால் தெரிந்த தமக்கை பூரணத்தின் 'அஸ்பெஸ்டோ' தகட்டுக் கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''நவம் தோட்டக்காரன் எவனையும் செய்யச் சம்மதிக்க மாட்டாள்''

''இராசம்மா தோட்டக்காரன் தோட்டக்காரன் என்று நையாண்டி செய்யுருய். அவன்டை உழைப்பென்ன, குண என்ன? முதுசொமாக வீடு, வளவு எல்லாம் இருக்கு. பிறகு ஒரு நாளைக்குத் துக்கப்படுவாய்''

''என்டை குமருக்கு என்ன குறை? இலந்தைப் பழம் போல இருக்கிருள். அவளை இருஞ்சிக் கொண்டு போக எத்தனை பெரிய உத்தியோகத்தன் வருவான்.''

பேராதனை யூனிவசிட்டியிலே வைத்தியம் படிக்கிற சிவகடாட்சம் விடுதலைக்கு வருகிற வேளைகளில் நவமணியைச் சுற்றித் திரிவது இராசம்மாவுக்குத் தெரியும். நவமணியின் அழகே அதற்குக் காரணம் என்பது இராசம்மாவின் தீர்க்கமான முடிவு. ஆகவேதான் மேற்கண்டவாறு கூறினுள். அதைக் கேட்ட கணபதிப்பிள்ளை ''நவத்துக்கு முப்பது வயதாகு மட்டும் உப்பிடித்தான் பேய்த்தனமாக உளறுவாய். அதுக்குப் பிறகுதான் உனக்கும் மகளுக்கும் புத்தி வரும்'', என்ருர்.

''நவத்துக்கென்ன பத்தொன்பது வயதுதானே. பாருங்களன் இருபத்திநாலு வயதுக்குள்ளை அவளுக்குப் பெரிய உத்தியோகத்தன் வலிய வீடு தேடி வராவிட்டால்''

டாக்டருக்குப் படிக்கிற மாப்பிளைக்கு நவமணி கண்ணடிக்கத் தொடங்கிவிட்ட இரகசியம் பூரணத்துக்குத் தெரியாது.

**வயது 20**

நெளிந்து வளைந்த அந்த ஒழுங்கையில் வடக்கு நோக்கி ஓடிக்கொண்டிருந்த பைசிக்கில் பூரணம் வீட்டைக் கடந்து நவமணி வீட்டை அண்டியபோது, வேகங் குறைந்து கிலுகிலு என்று மணி ஓசை எழுப்பியது.

வழமைக்கு மாருகக் காலையில் நேரத்தோடு குளித்து கன்னவகிட்டு வாரி ஒற்றைப் பின்னல் பின்னிப் பொட்டிட்டு, பெட்டிக்குள்ளேயிருந்த மடிப்புக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலையாத 'றெடிமேட்' வெள்ளைப் பிளவுசையும், சிவப்பு ஸ்கேட்டும் அணிந்து முன்னேற்பாடாக எதிர்பார்த்து நின்ற நவமணி ஒழுங்கையில் சைக்கில் 'பெல்' சத்தம் கேட்டதும், ஆட்டுக் குட்டி போலத் துள்ளிச் சென்று கிணற்றுக் கட்டில் ஏறி நின்று கிடுகு வேலிக்கு மேலால் ஒழுங்கையைப் பார்த்தாள்.

நவமணி எதிர்பார்த்தவன், சைக்கிள் 'செயினைச்' சரி பார்ப்பது போலப் பாசாங்கு செய்து கொண்டு நின்ருன். அரவம் கேட்டு அவன் வேலிப் பக்கமாகப் பார்த்தான்.

நவமணியின் இலந்தைப் பழ வதனத்தை அலங்கரித்த கண்களின் காந்த வீச்சில், உலக இன்பங்கள் யாவும் திரண்டு நிற்பதை உணர்ந்தான். பேராதனை யூனிவசிட்டியிலே அநுபவியாத குளுமையை அனுபவித்தான்.

''நவமணி பேராதனைக்கு வந்திருந்தால் இதுவரையில் எத்தனையோ பேர் 'பூட்ஸ்' வாங்கியிருப்பார்கள்.''

இந்த எண்ணந்தான் மீண்டும் மூன்று மாதங்களின் பின்னர் நவமணியைப் பார்த்ததும் சிவகடாட்சத்தின் மனத் திரையில் மின் வெட்டியது.

நவமணி தனது நீண்ட பின்னலை வலக்கையால் பற்றி வட்டம் போட்டுக் காட்டினுள்.

''வரச் சொல்கிருள்''—சிவகடாட்சத்தின் நினைப்பு.

''என்னைக் கை பிடிப்பார்'' — நவமணியின் எண்ணம்.

சிவபூசையில் கரடி புகுந்தது போலத் திடீரென இராசம்மா கேற்றடிக்குச் சென்று.

''தம்பி, எப்ப வந்தனீங்கள்'' என்ருள்.

சிவகடாட்சம் பதட்டப்பட்டுக் கொண்டு நிற்பதை இராசம்மா அவதானித்த பொழுதும் அவள் அதைக் காட்டிக்கொள்ளவில்லை.

''காலமை மெயிலில்'' — இது சிவகடாட்சத்தின் பதில்.

''இனி எப்ப போறீங்கள் தம்பி''

''இரண்டு மாத லீவு.''

''இன்னும் எத்தனை வருசம் தம்பி படிக்க வேணும்?''

''மூன்று வருசம்.''

''கவனமாகப் படிக்க வேணும், தம்பி.''

இராசம்மா வேண்டுமென்றே கதையை அநுமார் வால் போல நீட்டிக் கொண்டிருந்தாள்.

சிவகடாட்சம் இடைக்கிடை தலையைச் சொறியும் சாட்டில் கிணற்றடிப் பக்கம் பார்த்தான். அந்த அழகு தேவதை ஜொலித்துக் கொண்டே நின்ருள். சிவகடாட்சத்துக்கு நினைப்பு நவமணி கிணற்றடியிலே நிற்பது இராசம்மாவுக்குத் தெரியாதென்று. நவமணியின் விருப்பம் தாய் கதையை வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பது. இராசம்மாவின் மனக்கண் முன்னே, கணவன் கணபதிப்பிள்ளை மரவள்ளிக் கிழங்கைத் தின்னும் அகிழான் என்னும் நில எலியைப் பிடிக்கப் பயன்படுத்தும் அகிழான் கொட்டே தெரிந்தது.

இவற்றையெல்லாம் பார்த்தபடி தனது வீட்டு வாசலில் உள்ள நிழல் மரவள்ளிக் குழைக்குள் மறைந்திருந்த கந்தசாமியின் உள்ளம் வேறு திசையில் ஓடிக் கொண்டிருந்தது:

''காற்சட்டை போட்டவனைக் கண்டால் எல்லாரும் வேலிக்கு மேலாலே பாய்ந்து பாய்ந்து பார்க்கிருளவை. தோட்டக்காரனைக் கண்டால் ஒருத்தியாவது பார்க்கிருளவை இல்லை. கக்கூசு எடுக்கிற சக்கிலியனைப் பார்க்கிறதைப் போலப் பார்க்கிருளவை.தோட்டக்காரனுடைய மகள் கூடத் தோட்டக்காரப் பெடியனைக் கண்டால் முகத்தைச் சுழிக்கிருள். உவன் சிவகடாட்சம் உவளை ஏமாத்திஞல்தான் எனக்கு நிம்மதி. கன்னுரை அம்மன் உதிலை இருக்கிரு வெண்டால் உவள் நவம் எப்பவெண்டாலும் என்னிடம் வலியத் தேடி வருவாள்.''

**வயது 24**

தாலி கட்டி முடிந்து மணமகன் மணமகளோடு ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தான். 'பெற்றேள் மாக்ஸ்' விளக்குகள் நீண்ட ஊர்வலத்துக்கு வழி காட்டிக் கொண்டிருந்தன. கொட்டு மேளத்தின் சத்தம், வெடிகளின் முழக்கம், வாணங்களின் வண்ணம் ஊர்வலத்துக்கு மெருகூட்டிக்கொண்டிருந்தன. அதே வேளை —

இராசம்மாவும் மகள் நவமணியும் தமது வீட்டுக் கோடியில் லாந்தர் ஒளியிலே சோக நாடகம் நடாத்திக் கொண்டிருந்தனர். அதில் பிரதான நடிகை நவமணி; துணை நடிகை இராசம்மா.

---

★ 'எப்பொழுது தூக்கம் கலைகிறதோ அப்பொழுது எழுந்துவிடு; எப்பொழுது எழுந்துவிடுகிருயோ, அப்பொழுது எதையாவது செய்' என்ற வரிகளை (காலஞ்சென்ற) மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்) படிக்கின்ற காலத்தில் நினைவுபடுத்திக் கொள்வாராம்.

— எடுத்தாளன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலத்தின் ஒவ்வொரு வெடியும் இராசம்மாவின் மனக் கோட்டையை உடைத்தெறிந்து கொண்டிருந்தது.

நட்டுவ மேளத்தின் கொட்டுச் சத்தம் நவமணிக்கு மயக்கத்தை உண்டு பண்ணியது.

'கன்னிகள் கண்ட காதலின் தோல்வி
கண்ணீரோடு கரைந்து ஓடி
எண்ணில்லாத தொல்லைகள் தந்து
இறந்த கதைகள் பல பல உண்டு'

என்று முழங்குவது போன்ற மனப் பிரமையை நவமணிக்குக் கொடுத்து அவளது நரம்புகளை முறுக்கிக் கயிறுகப் பிழிந்தது. நவமணியின் கையிலே பொலிடோல் போத்தல். அதை இழுத்துப் பறித்து இராசம்மா அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

திருமண ஊர்வலத்தின் கதாநாயகன் டாக்டர் சிவகடாட்சம் மணமகளின் கையைப் பற்றியபடி தனது நாடகக்காட்சியைக் கச்சிதமாக நடித்துக் கொண்டிருந்தான்.

**வயது 25**

கணபதிப்பிள்ளையின் வீட்டு விருந்தையில் தரகன் கந்தையன் இருந்தான். கணபதிப்பிள்ளை தூணோடு சாய்ந்து கொண்டு இருந்தார்.

தரகன் தனது அலுவலைக் கச்சிதமாக முடித்துக்கொண்டு போக எழுந்த பொழுது, கணபதிப்பிள்ளை தரகனது கைக்குள் ஐந்து ரூபாவைத் திணித்த பின் படலை வரை கொண்டு போய் விட்டார்.

தரகன் படலையில் நின்றபடி, ''பயப்படாதேயுங்கள் கணபதிப்பிள்ளை அண்ணே. அடுத்த நாளுக்கே ஒழுங்குபடுத்தித் தாறன். அதுக்குப் பிறகுதான் இந்தத் தரகனுடைய கெட்டித்தனம் தெரியும்'' என்று கூறினன்.

அப்போதுதான் அந்த ஒழுங்கை வழியே, தோட்டத்தை உழுத பின் கைக் கயிற்றிலே தனது எருத்து மாடுகளைத் துரத்திக்கொண்டு சென்ற கந்தசாமியின் காதில் கணபதிப்பிள்ளைக்குத் தரகன் வீரப்பாகக்கூறிய வார்த்தைகள் ஈர நிலத்தில் கலப்பைக் கொழு பாய்ந்தது போலப் பாய்ந்தன. கந்தசாமி நாணயக் கயிற்றைச் சுண்டியிழுத்து செங்காரியின் முதுகிலே துவரங் கேட்டியால் உறைக்கக் கொடுத்தான். செங்காரி முதுகை உள்வளைவாக வளைத்து ஒரு துள்ளுத் துள்ளியது. தரகன் கந்தையன் தப்பியது சில குமர்கள் செய்த பூர்வ புண்ணியமே.

மருமகன் கந்தசாமியின் செயலைப் பார்த்துக்கொண்டு நின்ற கணபதிப்பிள்ளை, ''உவன் ஒரு சின்ன உத்தியோகம் பார்த்தால் உப்பிடி ஆத்திரப்பட்டு வாயில்லாத பிராணிக்கு அடிக்கத் தேவையில்லை; எனக்கும் உந்தக் கரைச்சல் வந்திராது. நான்பேசி ஒழுங்கு படுத்த முதலே நவம் வேலியாலை பாய்ந்து உவனைப் பிடித்து இருப்பாள்'' என்று தன் பாட்டிலே புறுபுறுத்துக்கொண்டு நின்றார்.

''மருமோனரை அழகிலை சொக்கிப் போய் படலையைப் பிடித்துக்கொண்டு நிற்கிறியளோ? இஞ்சை வாருங்கோ. தரகன் கந்தையன் என்ன சொன்னவன்?''

இராசம்மாவின் குரல் கணபதிப்பிள்ளையை இழுத்து வந்து விருந்தைக் குந்திலே அமுத்தியது.

''மாப்பிளை என்ன உத்தியோகமாம்?''

''பியோன். நல்ல பொருத்தம். நல்ல குணம்.''

''போயும் போயும் ஒரு பியோன் மாப்பிளை பிடிக்கவே உந்த அக்கப்பாடு. நான் நினைக்கயில்லை, நவம் சம்மதிப்பாள் எண்டு.''

''இராசம்மா. இப்ப நவத்துக்கு என்ன வயசு?''

''இருபத்தைஞ்சு.''

''குமர் முற்றிக் குரங்காகிறது என்ற பழமொழி உனக்குத் தெரியுமோ? இனி ஒவ்வொரு வயசும் ஏற ஏற இவ்விரண்டாயிரம் கூடக் கேட்பினம்.''

''இலந்தைப் பழம் போலப் பிள்ளை. அவளை இருஞ்சிக் கொண்டுபோக ஆராவது பெரிய உத்தியோகத்தன் வராமலா

---

★ பாலியலைப் பள்ளிக்கூடங்களில் பாடமாக வைத்து சொல்லிக் கொடுப்பதன் மூலம் ஒழுக்கம், மகிழ்ச்சி, வியாதி பரவாமையெல்லாம் ஏற்பட ஏதுவாகிறது என்பது ஒரு வாதம். ஆனல் ஸ்வீடன் நாட்டை உதாரணத்திற்குப் பார்த்தால் இது எவ்வளவு தூரம் உண்மை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். 6 வயது முதல் 16 வயது குழந்தை வரையிலான பிள்ளைகளுக்கு வகுப்பு நடத்தி பாலியலைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனல் பாலியலால் ஏற்படும் வியாதிகள் இங்கு உள்ளதைப் போல உலகத்தில் வேறு எங்குமே இல்லை என நிரூபிக்கப் பட்டுள்ளது.

— எடுத்தாளன்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவான். குறைஞ்சது ஒரு கிளறிக்கல் மாப்பிள்ளை யெண்டால் தான் செய்வாளாம்.''

''உப்பிடி ஒரு உத்தியோகத்தனைப் பிடிக்கிறதெண்டால் நவத்தைக் கிடுகு வேலிக்குள்ளை வைத்துக் கொண்டு சரி வராது. முழங்காலுக்கு மேலை சட்டை போட்டு போயா நாட்களிலை யாழ்ப்பாணத்துக்குக் கிரமமாக அனுப்பினால் ஒரு வேளை பெரிய உத்தியோக மாப்பிளை பிடிக்கலாம். உத்தியோக மாப்பிளை பிடிக்கப் போற சில பேர் பிள்ளை பிடிச்சுக்கொண்டு வாறதும் தெரியுந்தானே. மாப்பிளை பிடிக்கிறதும் ஒரு கலையெண்ணை.''

தனக்கு வரப் போகிற கணவன் குறைந்தது ஒரு கிளறிக்கல் உத்தியோகத்தனாக இருக்கவேண்டும் என்று விரும்புகிற நவமணி ஒரு தபால் பியோனைக் கை பிடிக்க ஒருப்படுவாளா?

**வயது 30**

உக்கிச் சிதைந்து போய் விட்ட எல்லைக் கிடுகு வேலியின் தெற்கே கந்தசாமியின் எருத்து மாட்டுத் தொட்டில், எதிர்ப் பக்கம் நவமணியின் ஆட்டுக் கொட்டில்.

நவமணி தனது கறுப்பி ஆட்டில் மாலைப் பால் கறந்து கொண்டிருந்தாள்.

இராசம்மாவுக்கும், பூரணத்துக்கும் கேட்கக் கூடியதாக நவமணி திடீரென 'ஐயோ, முறையோ' என்று கூச்சல் போட்டாள்.

''என்ன பிள்ளை? என்ன நவம்'' என்று கேட்டபடி இராசம்மா ஆட்டுக் கொட்டிலுக்கு ஓடினாள்.

பூரணம் மாட்டுத் தொட்டிலை அடைந்தாள்.

''அம்மா! உந்தத் தோட்டக்காரக் கரி முண்டம் 'கிழடி' என்று பாடி குரக்கன் ஓட்டாலே எறியுறானம்மா. இஞ்சை பாரெணை எறிந்த ஓட்டுத் துண்டுகளை.''



இராசம்மாவும் பூரணமும் ஓராட்டம் கறிக்கடை வார்த்தைகளைப் பயன்படுத்திக் களைத்த பின் இருள் கௌவத் தொடங்கி விட்ட தங்கள் தங்கள் வீடுகளுக்கு விளக்கேற்றப் போய்விட்டார்கள்.

விருந்தையிலே கணவன் எதிரே இருந்த இராசம்மா அன்று மாலை கந்தசாமி குரக்கன் ஓட்டாலே எறிந்த கதை தொடக்கம் பூரணத்தோடு நடந்த கறிக்கடைப் போர் வரை எல்லாவற்றையும் நீட்டி முழக்கிக் கூறி முடித்தாள்.

''நவத்தை விட்டோடை வைச்சிருந்தால் உவன் கந்தசாமி ஏதாவது வம்பு பண்ணிக் கொண்டுதான் இருப்பான். எங்கேயாவது நவத்துக்கு ஒழுங்கு செய்யுங்கோவன்.''

''நான் பேசி வாற மாப்பிளை தான் அவளுக்கு ஒத்து வராதே''

''இஞ்சருங்கோ. இப்ப அவள் முந்தியைப் போல இல்லை. பியோன் எண்டாலும் பரவாயில்லையாம். சின்னத்தொழில் எண்டாலும் பெஞ்சன் தொழில் எண்டால் போதுமாம்.''

''இருபத்தைஞ்சு வயசிலை பியோன் வேண்டாம். முப்பது வயதாகினாப் போலை தான் பியோன் தேவையாமோ? முப்பத்தைஞ்சு வயதாகினால் டிறைவர் எண்டாலும் பரவாயில்லை— தோட்டக்காரன் எண்டாலும் பரவாயில்லை எண்டு சொல்லுவாள். நான் முந்தியே சொன்னனெல்லே?''

''அதென்ன சொன்னனீங்கள்?''

''உத்தியோகத்தன்ரை குமர்களுக்கும் உத்தியோக மாப்பிளைதான் தேவையாயிருக்கு — எல்லாத்துக்கும் மேலாலை தோட்டக்காரன்டை குமர்களுக்கும் உத்தியோக மாப்பிளைதான் தேவையாயிருக் கெண்டு.''

''வீண் அலம்பல் நியாயத்தை விட்டுப் போட்டு, நவத்துக்கு எங்கையாவது சின்ன உத்தியோகத்தனையாவது பாருங்கோ.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கேகாலையில் ஒரு பெடியன் இருக்கிறான். உருப்பிராய் சொந்தவூர். விதானை பகுதி. பொயிலைக் கடை வைத்திருக்கிறான். அந்தப் பொடியனைச் செய்தால் என்ன?''

''நவம் என்ன சொல்வாளோ?''

நவம் சொல்லிவிட்டாள்:-

''உதுக்குத்தானே முப்பது வயது மட்டும் இருந்தனான். உப்பிடி ஒருத்தனைச் செய்வதிலும் நான் வீட்டோடை இருக்கிறன். உங்களுக்குப் பாரம் எண்டால் சொல்லுங்கோ. பொலிடோல் இருக்குது.''

**வயது 33**

குமர்கள் இருக்கிற வீட்டிலே தரகர்களின் தரிசனத்துக்குக் குறைவில்லை என்பதற்குக் கணபதிப்பிள்ளை வீடு நல்ல எடுத்துக்காட்டு.

வேறொரு கடைக்கார மாப்பிளைக்கு நவமணியைப் பேசித்தான் வேறு ஒரு தரகன் அங்கு சென்றிருந்தான். யாழ்ப்பாண நகரத்திலே கிராண்ட் பசார் வீதியிலேயுள்ள பிரபல்ய புடைவைக் கடை ஒன்றின் முதலாளி, நவமணி தீபாவளிக்கு உடுப்பு எடுக்கப் போன சமயம், அவளின் அழகில் சொக்கிப் போனார். அதன் முடிவே தரகன் யாழ்ப்பாணத்திலிருந்து ஆவரங்காலுக்குக் கணபதிப்பிள்ளையின் வீட்டைத் தேடிப் போயிருந்தான்.

அத்தரகன் கடை முதலாளியின் செல்வக் கொழிப்புகளைக் கூறிக் கணபதிப்பிள்ளைக்குப் பொடி வைத்துக் கொண்டிருந்தான்.

மாப்பிளை பெரிய முதலாளி என்பதை அவர்களது கதையிலிருந்து தெரிந்து கொண்ட இராசம்மா, ஓர் இறுதி முடிவோடு நவமணியைத் தேடிக் கிணற்றடிக்குப் போனாள்.

''என்னம்மா அவசரமாய் ஓடியாறாய்?''

''நவம் இவ்வளவு காலமும் நானும் சேர்ந்து உன்னைக் கெடுத்துப் போட்டன்.''

''சொல்லம்மா.''

''பிள்ளை உனக்கும் வயசு முப்பத்தி மூண்டு முடியப் போகுது. இப்படியே உத்தியோக மாப்பிளையெண்டு ஒற்றைக் காலிலே நின்றால் உனக்கும் கூடாது; எங்களுக்கும் கவலை. மூண்டு வருசத்துக்கு முதலும் கடைக்காரன் எண்டு வேண்டாம் என்றிட்டாய். அந்தப் பொயிலைக் கடைக்காரப் பொடியன் கலட்டி அப்பக்காரக் பொன்னம்மா வீட்டிலே கல்யாணம் செய்து இப்ப காரும் வைத்திருக்கிறான்.''

''நான் இப்ப என்னம்மா செய்யுறது?''

''தரகன் ஆரோ ஒரு பெரிய கடைக்கார மாப்பிளையைப் பேசி வந்திருக்கிறான். சரியெண்டு சொல்லட்டோ?''

''..............''

நவம் ஒன்றுமே பேசவில்லை. மௌனம் சம்மதம். அதுதான் குமர்களின் இயல்பு. அது இராசம்மாவுக்குத் தெரியாதா என்ன?

''அப்ப நான் சரியெண்டு சொல்லுறன் நவம்''

''......ம்ம்......''

தரகன் வெற்றிலைத் தட்டத்தை மடியிலே வைத்தபடி வெற்றிச் சிந்தனையிலே மிதந்தான்.

''மாப்பிளைக்கு யாழ்ப்பாணத்திலே பெரிய புடவைக் கடை. குறைந்தது ஆறு இலட்சம் பெறும். இரண்டு கார். பெரிய வீடு வளவு. கிளிநொச்சியிலே இருநூறு பரப்பு நெல் வயல்''

என்று கணபதிப்பிள்ளை அடுக்கிக் கொண்டே போனார்.

இராசம்மாவின் நெஞ்சு நிறைந்தது. ''இவ்வளவு காலமும் நவம் இருந்தாலும் பெறுந்தான்'' என்று இராசம்மாவின் மனம் எண்ணியது.

கணபதிப்பிள்ளை மாப்பிளையைப் பற்றிக் கூறி முடிக்க முன்பே ''நவத்துக்குச் சம்மதம். ஓமெண்டு சொல்லுங்கோ'' என்றாள் இராசம்மா.

---



ஒருவர்: (கவலையோடு) எனக்கு இப்போ பதின்மூன்று பிள்ளைகள். இது போதும். இத்துடன் குடும்பக் கட்டுப்பாடு செய்யப் போகிறேன்.

மற்றவர்: சீச்சீ. பதின்மூன்று அதிர்ஷ்டமில்லாத நம்பர். பதினாலாவதோடு செய்.

— மேனகை



4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இராசம்மா. உனக்கும் மக ளுக்கும் இன்னென்று கட்டாயம் தெரிய வேண்டும்.''

''சொல்லுங்கோ.''

''மாப்பிளைக்கு வயது நாற் பத்திரண்டு. ஐந்து பிள்ளைகள். பெண்சாதி செத்துப் போச்சுது''

தாயோ மகளோ 'ஆம்' என்றும் கூறவில்லை. 'இல்லை' என்றும் மறுக்கவில்லை.

தெரு விளக்கு 'பல்ப்' திடீ ரென ஒளி பரப்பத் தொடங்கி யது.

## வயது 34

நான்கு மாதங்களின் பின் னர் கணபதிப்பிள்ளையின் வீட் டுக்கு அதே தரகன் சென்றிருந் தான். முறைப்படி பெண் பார்க் கவும், கல்யாண வீட்டுக்கு நாள் குறிக்கவும் தரகனேடுபுடைவைக் கடை முதலாளியும் வேறு சிலரும் சென்றிருந்தனர்.

கணபதிப்பிள்ளையின் உள் ளம் நிலைகொள்ள மறுத்தது. அவரது மண்டை ஓட்டுக்குள்ளே இரண்டு பெரும் படைகள் போரிட்டன.

ஆட்டுக் கொட்டிலுக்கு ளிருந்து நவமணி குமட்டிக் குமட்டி வாந்தி எடுப்பது குசினிக் குள்ளிருந்து பெண் பார்க்க வந்த வர்களுக்குப் பாற் கோப்பி தயா ரித்துக் கொண்டிருந்த இராசம் மாவை ஏதோ செய்தது. இரா சம்மா ஆட்டுக் கொட்டிலுக்குப் பறந்து போனுள்.

வயிற்றைப் புரட்டி வாந்தி யெடுத்த நவமணியின் வேத னையை இராசம்மா கவனிக்க வில்லை. இராசம்மா நவமணியின் வயிற்றையே உற்றுப் பார்த் தாள்.

''நவம்''

''என்ன?''

நவமணியின் பதில் வேண்டா வெறுப்பான கேள்வியாக இருந் தது.

''என்ன பிள்ளை நடந்தது?''

''உலகத்திலே நடக்காதது ஒண்டும் நடக்கவில்லை.''

''என்ன சொல்லுருய் நவம்?''

''மூன்று மாதமாக முழுக வில்லை.''

''படுபாவி எங்கடை வாயிலை மண்ணை அள்ளிப் போட்டிட் டாயே. உலகத்திலே இனி எப் படிக் கண் விழிக்கிறது? வெளி யாலை சத்தம் கேளாமல் ஒங் காளி...... பெம்பிளை பார்க்க வந் திருக்கினம்.''

''ஏன்?''

''கல்யாணத்தை இரண்டு மாதம் கழிச்சு வைப்பம். பின் னேரம் மருந்தரைச்சுத் தாறன்''

''ஏன்?''

''உந்த வயித்தோடையோ கல்யாணம் செய்யப் போருய்?''

''ஓம்.''

''உனக்கென்ன விசரே?''

''எனக்கு விசரில்லை. உனக் குத்தான் விசர்.''

''என்டை பிள்ளையை யாரோ படுபாவி கெடுத்துப் போட்டான்.''

''இங்கை ஒருத்தரும் என் னைக் கெடுக்கவில்லை''

''ஆர் வந்து போனதெண் டாவது சொல்லன் பிள்ளை''

நவமணி சுட்டு விரலை நீட்டி ளுள்.

கிடுகு வேலிக்கு மேலால் இராசம்மா உற்றுப் பார்த்தாள்.

அதே இலந்தை மரத்தில் இலந்தைப் பழம் சுவைத்துக் கொண்டிருந்தான் கந்தசாமி.

(யாவும் கற்பனை)

*



பையன்: சார்! எனக்கு ஞாபக மறதி அதிகமாயிருக்கிறது. நல்ல மருந்தொன்று தாருங்கள்.

டாக்டர்: அப்படியா!

பையன்: ஆமாம் சார். பார்த்த படங்களையெல்லாம் மறந்து போய் திரும்பப் பார்க்கிறேன்.

— மேனகை

ஒருவர்: என்னப்பா கவலையோ டிருக்கிருய்?

மற்றவர்: எல்லோரும் நான் விடும் பிழையைச் 'செக்' பண்ணுகிருர்கள். ஆனுல் நான் பிழைக்கிறதற்கு ஒரு செக் எழுதித் தர மாட்டார்களாம்.

— மேனகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— அத்தியாயம் ஆறு —

# நதியும் ஏரியும்

கல்லூரி விடுவதற்கு இன்னும் இரு பாட நேரங்கள் இருந்தன. மிஸிஸ் துரையப்பா கடந்த ஒரு வாரமாகக் கல்லூரிக்கு வராததால், பாட நேரங்கள் பல வீணே கழிந்தன. மிஸிஸ் துரையப்பா கல்லூரிக்கு வராது இருப்பதால் பொதுவாக வகுப்பில் கலகலப்பு இல்லாதது போல ராணிக்குப்பட்டது. துரையப்பா ரீச்சர் மிகவும் நல்லவர். சிரிப்பும் கதையுமாகத்தான் பாடத்தை நடாத்துவார். பல்கலைக்கழகப் புதுமுகப் பரீட்சைக்குச் சில மாதங்களே இருந்ததால், ஆசிரியையின் வரவின்மை வகுப்பில் இனந் தெரியாத ஒருவித பயத்தை ஏற்படுத்தி இருந்தது.

வயது வந்த பெண்கள்; கல்வியின் தன்மையை நன்குணர்ந்த வகுப்பு. பல்கலைக் கழகத்தினுள் எவ்வாருயினும் நுழைந்து பட்டம் பெற்றுவிட வேண்டும் என்ற துடிப்பு எல்லாரிடமும் இருந்தது.

பல்கலைக் கழகத்தை ஒரு சொர்க்க பூமியாக எல்லாரும் கற்பனை செய்திருந்தார்கள். ஒரு வகையில் அத்தகைய ஒரு கனவைத் தூண்டி, படிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்திவிட்டதில் ஆசிரியைக்கும் பங்குண்டு.

ஆசிரியை வராதமையினுல் மாணவிகள் யாவரும் நூல் நிலையத்திற்குச் சென்றுவிட்டார்கள். ராணியும் கோகிலாவும் மட்டும் செல்லவில்லை. ராணிக்கு வகுப்பில் இருந்து ஏகாந்தமாகப் படிப்பதில் ஆசையிருந்தது. மேலும், அன்று மனேன்மணி நூல்நிலையத்தில் ஏற்படுத்திவிட்ட வேதனை வடு இன்னமும் முற்றுக மாறிவிடவும் இல்லை.

ராணி மனந் திறந்து பேசுகின்ற ஒருத்தி என்ருல் கோகிலாதான். கோகிலாவிற்கும் ராணி மீது மிகுந்த நட்பிருந்தது.

ராணி எதையோ ஆழமாகப் படித்துக் கொண்டிருந்தாள். கோகிலா எதையோ வேகமாக எழுதிக் கொண்டிருந்தாள். தோழி எழுதுவது நிச்சயமாக வகுப்பு வேலையல்ல என்பதில் ராணிக்குச் சந்தேகமேயில்லை.




கோகிலா இப்போது என்னைப் போலில்லை. மிகுந்த கவனத்தோடு அலங்காரம் செய்து கொள்வது போலப் பட்டது. முகத்திலும் பேச்சிலும் செயலிலும் ஒரு வகை வேகமும், மலர்ச்சியும் காணப்பட்டன.

பழைய கோகிலாவா இவள்?

எழுதி முடித்துவிட்டுக் கோகிலா இவளுக்கு அருகில் வந்து அமர்ந்தாள். ராணி படித்துக் கொண்டிருந்த நூலை மூடி வைத்துவிட்டு அவளைப் பார்த்தாள்.

''ஏன் தான் இந்த ரீச்சர் வராது நிற்கிருவோ? சோதனை நெருங்கி வருகிறது...'' என்ருள், ராணி.

''அவ இனிக் குறைஞ்சது இரு மாதத்துக்கு வரமாட்டா... இதுதான் பெறு மாதம்... உமக்குத் தெரியாதே?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள், கோகிலா! ''எங்கடை ரீச்சர்மாருக்கு இது பெரிய கரைச்சல்தான்... படிப்பிக்க வருகிறவை கலியாணமாகாதவர்களாக இருக்க வேணும்... போன முறை சுப்பிரமணிய ரீச்சர் வராது நின்ரு...... இப்ப துரையப்பா ரீச்சரோடு, சண்முக ரீச்சரும் லீவாம்...''

கோகிலாவின் பேச்சைக் கேட்க ராணிக்கும் சிரிப்பு மலர்ந்தது.

''உமக்கு இந்த விடுப்புகள் தான் தெரியும்...''

''தெரியத்தானே வேணும்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''அது சரி, கோகிலா, நீர் என்ன வலு கவனமாக எழுதிக் கொண்டிருந்தீர்?...''

ராணியின் இக் கேள்வியைக் கேட்ட கோகிலாவின் முகம் வெட்கத்தால் நிறைந்தது போலப்பட்டது. அவர் விழிகளில் ஒரு வகைப் பெருமிதத்தோடு கலந்த ஏக்கம் மேவி நின்றது.

'ஒன்றுமில்லையே...?' என்று சிரிக்க முயன்றாள்.

''பொய்... நீரப்பா இப்ப ஒன்றுமே சொல்கிறதில்லை... எல்லாத்தையும் மறைக்கிறீர்......'' என்று தூண்டினாள் ராணி.

கோகிலா எங்கோ வெறிக்க நோக்கிவிட்டுத் தோழியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

''எனக்குப் படிக்கவே விருப்பமில்லை, ராணி.''

''ஏன்... ஏனப்பா?...''

''என்னால் இனிப் படிக்க முடியாது...... மனம் படிப்பிலை போக மறுக்குது...''

''நீர் மகேஸ்வரி போலக் கலியாணம் செய்துகொண்டு வீட்டிலை இருக்கப் போறீராக்கும். இஞ்சை பாரும், கோகிலா, கல்லூரி வாழ்க்கைதான் எங்களுக்குச் சுதந்திர வாழ்வாக இருக்கும்... கலியாணம் செய்திட்டால் இப்படி ஒரு வாழ்க்கை கிடைக்காது போயிடும்...... அதுக்காகக் கலியாணம் கூடாது என்று கூறவில்லை. பெண் தன்னை ஒருவனிடம் ஒப்படைக்காமல் தனியே வாழவே முடியாது...கூடாது...''

ராணி கூறுவதைக் கோகிலா இமைக்காது கேட்டாள். ராணியின் இதயத்திலும் மெல்லிய ஒரு அனுக்கல் தோன்றத்தான் செய்தது. எங்கோ தன்னை நம்பி தனக்காக ஒருவன் காத்திருக்கிறான்.

கோகிலா பேசாது இருந்தாள். ராணி தொடர்ந்தாள்.

''கோகிலா, உமக்கு அப்ப கலியாணம் பேசுகினமா?''

''இல்லை...''

''அப்ப...''

''ஒன்று சொல்வேன். எவருக்கும் கூறமாட்டீரே?''

''இல்லை...... நம்பிக்கை இல்லையா?''

கோகிலா மீண்டும் மௌனமாக இருந்தாள். கனவுகள் விழிப்பு நிலையிலும் எழுமா? ராணிக்குக் கோகிலாவின் நிலைக்குரிய காரணம் புரியுமாப் போலவும், புரியாதது போலவும் இருந்தது.

கோகிலா ஒரு புத்தகத்தை விரித்து, அதனுள் இருந்த ஒரு கவரை எடுத்துப் பிரித்தாள்.

— ஒரு புகைப்படம்.

அப்புகைப்படத்தைக் கையில் வாங்கிப் பார்க்க வேண்டிய அவசியம் ராணிக்கு ஏற்படவில்லை. கோகிலா படத்தை எடுத்த போதே அப்படத்திற்குரியவனை அவள் கண்டு கொண்டாள்.

''வாமதேவன்... மனோவின் அண்ணன்... கோகிலா, எனக்கு இது முன்பே சந்தேகம்...''

கோகிலா தனது மனதைத் திறந்து கக்கிவிட்டாள்:

---



ஒருவர்: நான் ஆயிரம் ரூபாவைக் களவு கொடுத்துவிட்டேன்.

மற்றவர்: ஹ...ஹ...ஹ...

ஒருவர்: நான் கவலைப்படுகிறேன். நீ கேட்டவுடனேயே சிரிக்கிறாயே!

மற்றவர்: உதைக் கேட்க எனக்கு ஆறுதலாக இருக்கிறது. நான் இருநூறு ரூபாவைக் களவு கொடுத்திட்டிருக்கிறேன்.

— மேனகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவரை என்னுல் மறக்கவே முடியவில்லை...... நான் பள்ளிக்கு வரும் போதும் போகும் போதும் அவரைச் சந்தித்திருக்கிறேன்...... நரியன்குண்டடியில் நின்று சிரிப்பார்... ராணி, அவரையே கலியாணம் செய்து கொண்டு நின்றுவிடலாம் போல இருக்குது...''

ராணி கோகிலாவை இரக்கத்தோடு பார்த்தாள். வாமதேவன் மீது ராணிக்கு நல்ல அபிப்பிராயமே கிடையாது. என்று சுபத்திராவிற்குக் கடிதம் கொடுக்க முயன்றுனே அன்றிலிருந்து அவனை அவள் வெறுத்தாள். கோகிலா ஏமாந்து போனுள்.

''கன காலமாகத் தொடர்பா, கோகிலா?''

''ஓம்...ஆறேழு மாதமாக... கடிதம் எழுதுகிற நாங்கள்... எப்படி எல்லாம் எழுதுவார் தெரியுமா, ராணி? என்னைத் தவிர வேறு எவரையும் தனக்குப் பிடிக்கவில்லையாம்...'' கோகிலா கூறிக் கொண்டே இருந்தாள். ராணியின் உள்ளம் தோழிக்காகக் கண்ணீர் விட்டுக் கொண்டே இருந்தது.

இந்த ஆண்கள் தாம் எப்படிப்பட்ட வெறியர்களாக இருக்கின்றுர்கள்? ஒரு பெண் கிடையாது போனுல், பிறிதொரு பெண்ணிடம் ஈடுபாடு கொள்ள மனம் இடந் தருகின்றதே. 'ஆண் ஆறு போன்றவன். பெண் ஏரி போன்றவள்' — யாரோ எப்போது எழுதி, தான் படித்தது ராணிக்கு நினைவு வந்தது. உண்மைதான் ஒருவனேடு தன்னைச் சேர்த்துத் தேங்கி நிலைத்து அமைதி கண்டுவிடுகின்றுள் பெண். ஆண் ஆறு போல பெண்கள் இடையே விரைந்து கொண்டே இருக்கின்றுன். முடிவு அழிவுதான். புறனடைகள் இருக்கலாம். நிச்சயமாக வாமதேவன் ஏரியாக இருக்க முடியாது என்பதில் அவளுக்கு எள்ளளவும் சந்தேகம் கிடையாது.

ஏரி நீரைக் கூடச் சில ஆறுகள் கவர்ந்து சென்றுவிடுகின்றன.

''என்ன ராணி, கடுமையாக யோசிக்கிறீர்?'' என்று வினவினுள், கோகிலா.

கல்லூரி விடுவதற்கு அறிகுறியாக மணி அடித்தது.

பிறவுன் றேட்டில் வலது புறமாகத் திரும்பி வந்து கொண்டிருந்த போது, ராணி கேட்டாள்.

''நீர் முந்தி எவ்வளவு நல்ல பிள்ளையாக இருந்தீர்?''

ராணியின் கேள்வியால் கோகிலா சற்றுத் திடுக்கிட்டவள், போலானுள்.

''ஒருவரை விரும்புவதால் நான் நல்ல பிள்ளையில்லையா, ராணி?...''

''அப்படியல்ல கோகிலா... வெகு அமைதியாக இருந்தனீர். எப்படி இதற்குள் சிக்கினீரோ? நமது சமூகத்திலே இதற்கு வரவேற்பே இல்லை. மேலும், நமது வாழ்வில் இதனுல் வீண் அவப்பெயர்தான்... ஆண்கள் இதனுல் ஒரு போதும் பாதிக்கப்படுவதில்லை. எல்லாக் கெட்ட பெயரும் எங்கள் தலை மீது தான் விடியும்....''

கோகிலா மெதுவாகச் சிரித்தாள்.

''உமக்கு ஒன்றுமே தெரியாது, ராணி. அவர் என்னைத் தான் கலியாணம் செய்வார்...... எனக்கு அது நல்லாத் தெரியும்''

---




தரமான கதைகளுக்கு
சுவையான நாவல்களுக்கு
கருத்து செறிந்த கட்டுரைகளுக்கு
**கல்கி** படியுங்கள்

## மாத ஜோதிடம்

—தமிழ் மாத சஞ்சிகை—

ஜோதிடரின் உதவியின்றியே
ஜோதிடம் பார்க்க
சிறந்த மாத இதழ்.

த. தம்பித்துரை அன் சன்ஸ்,
யாழ்ப்பாணம். — கொழும்பு
போன்: 82878




5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு நம்பிக்கை? பெண்ணை ஏமாற்றுவது மிகவும் சுலபம். கோகிலாவின் நம்பிக்கை வெற்றி பெற வேண்டுமென ராணி மனமாரப் பிரார்த்தித்தாள்.

அவர்கள் நரியன்குண்டை நெருங்கிய போது கடை வாசலில் வாமதேவன் நின்றிருந்தான். ராணி சற்றுத் தூரத்தில் வரும்போதே அவதானித்துவிட்டாள். கோகிலாவின் நடையில் ஒரு வகைத் துள்ளல்.

''அவர் நிற்கிறார்'' என்றாள் கோகிலா.

ராணி தலையைக் குனிந்து கொண்டு விரைந்தாள்.

நரியன்குண்டில் மழை வெள்ளம் நிறைந்து நின்றது. பலர் துணி சலவை செய்து கொண்டிருந்தார்கள். சிலர் தோய்த்த துணிகளை வீதியோரமாகக் கொடி கட்டிக் காயவிட்டிருந்தார்கள்.

நரியன்குண்டில் கரையில் நின்றிருந்த சிறுவர்கள், நீர் மட்டத்தில் தலையை நீட்டிய தவளைகளைக் கல்லால் அடித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் கரையில் வளர்ந்திருந்த புளியமரத்திற்குக் கல்லால் வீசிப் புளியங் காய்களை வீழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

ராணிக்குத் தெரியத்தக்கதாக இப்பகுதி முன்பு பற்றைகள் நிறைந்து கிடந்தது. மாலை வேளையில் தனிய வர முன்பு எல்லாருக்கும் தயக்கமே. இன்று வீதிகள் நரியன்குண்டின் இரு கரையும் தொட்டுச் சென்றன. வீணே கிடந்த பனை வளவுகளெல்லாம் கல்வீடுகளால் நிறைந்து காட்சி தந்தன.

ராணி அம்மன் கோவிலை நெருங்கிவிட்டாள். கோயிலைப் பார்க்கும் போது கடந்த திங்கள் நிகழ்ந்து முடிந்து போன நிகழ்ச்சி மனதில் எழுந்தது. 'எவ்வளவு ஆணவத்தோடு தங்கராசா அண்ணரை அடித்திருக்க வேண்டும். பாவம், மகாலிங்கம்... தங்களுக்காக அடிபட்டாரே?'

அம்மன் கோவில் கலவரத்தின் எதிரொலியாகக் கந்தையரும், வாமதேவனும் அனுமதியின்றிச் சாராயம் விற்றதாகப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட சம்பவமும் ராணிக்கு நினைவு வந்தது. தங்கராசாதான் சொல்லிக் கொடுத்ததாக ஊர் எங்கும் பேசிக் கொண்டார்கள்.

தங்கராசா செய்யக் கூடியவன்தான்.

வேலுப்பிள்ளையோடு விதானையார் பின்பு சமாதானமாகி விட்டார். விதானையாருக்கு இப்போது கோபம் கந்தையர் மீது தான். வேலுப்பிள்ளை வழக்கம் போல விதானையார் குடும்பத்தினரின் அழுக்குத் துணி எடுத்து வந்தார்.

தந்தை அதன் பிறகும் அவர்களுக்குத் துணி வெளுப்பதில் ராணிக்குச் சம்மதமில்லை.

''இதோ பார் பிள்ளை, நாம் எங்கடை தொழிலைச் செய்யத்தான் வேணும்...... செய்யாமல் எப்படிப் பிழைக்கிறது...'' என்றார் வேலுப்பிள்ளை.

''லோன்றி வையுங்கள்...'' என்றான், கனகசிங்கம். கனகசிங்கத்திற்கு 'லோண்றி' ஒன்று தொடங்கும் ஆசை இருக்கின்றது என்பதனை ராணி அறிவாள்.

''உவையின்ரை வீடுகளுக்குப் போய் துணி எடுக்கிறதை இனி விட்டிடவேணும்... சலவை செய்ய விரும்பினால் கொண்டு வந்து தர வைக்க வேணும்...'' என்று அம்மன் கோயில் கலவரத்திற்குப் பிறகு அடிக்கடி கூறி வந்தான்.

வேலுப்பிள்ளைக்குக் கனகசிங்கனின் பேச்சு ஒத்துக்கொள்ளவில்லை.

''ஊருக்கை லோண்றி வைக்கக்கூடாது... பிழைக்கேலாது... நமது பரம்பரையிலும் இல்லாத வழக்கம்'' என்பார்.

ராணிக்குத் தம்பியின் பேச்சில் விருப்பம் இருந்தது. ஆனால், அவனது படிப்பினை எண்ணிப் பேசாது இருந்துவிட்டாள். வண்ணார்பண்ணையில் இதுவரை எவரும் லோண்றி தொடங்கவில்லை. லோண்றி தொடங்குகின்ற துணிச்சல் எவருக்குமே இருக்கவில்லை. 'யார் அழுக்குத் துணிகளைக் கடையில் கொண்டு வந்து தரப்போகின்றார்கள்' என்ற பயமிருந்தது.

காலம் காலமாக வீடுகளுக்குச் சென்று அழுக்குத் துணிகளை எடுத்துச் சலவை செய்து வந்த ஒரு வழக்கத்தை மாற்றுகின்ற புரட்சி வண்ணார்பண்ணையில் நிகழக்கூடியது தானா?

ராணியின் கால்கள் நடை போட, மனமும் எதைஎதையோ எண்ணி நடை போட்டது. அம்மன் கோவிலின் தெற்கு வீதியில்

---

★ குவெட்டா பகுதியிலிருந்து ஒருவர் அங்கு அடிக்கடி ஏற்படும் பூமியதிர்ச்சிக்குப் பயந்து தன் மகளை சென்னையில் உள்ள தன் உறவினர் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். சில நாட்களுக்குப் பின் அவருக்குச் சென்னையிலிருந்து ஒரு தந்தி வந்தது.

''உங்கள் மகளை திருப்பியனுப்பியிருக்கிறோம். வேண்டுமானால் பூமியதிர்ச்சியை இங்கு அனுப்பி வையுங்கள்.''

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் விதானையாரின் வீடு இருக்கின்றது. சீனியர் ஒழுங்கையும், வீதியும் இணைகின்ற சந்தியில் அவ் வீடு இருந்தது.

கோயிலைக் கடந்து வரும் போது விதானையார் வீட்டு வாசலில் இருவர் நிற்பதை ராணி கண்டாள். ஒருவன் தங்கராசா; மற்றவன் முன்பின் தெரியாத ஒருவன்.

அவள் மனம் ஏனோ காரணமின்றித் திடுக்கிட்டது. அவள் சென்று வருகின்ற வழக்கமான பாதைதான். விதானையார் வீட்டைக் கடந்துதான் அவள் போய் வந்திருக்கிருள்.

இன்று ஏனோ அவளது உள்ளத்தில் இனந் தெரியாத பயம் குடி கொண்டது போல இருந்தது.

வேகமாக நடந்து விதானையார் வீட்டைக் கடந்தாள்.

அவள் உள்ளம் பயந்தது சரியாகவே போய்விட்டது.

''உதார்...?'' தங்கராசாவுடன் கூட நின்றவன் கேட்டான்.

''உதோ... உது வண்ணுரப் பெட்டை. உவயளை இப்ப கையிலை பிடிக்க முடியாது. படிப்பும் எடுப்பும் அவையள் கொடி கட்டிப் பறக்கினம்...''

வேணுமென்றே தங்கராசா உரக்கக் கூறியதாக ராணிக்குப் பட்டது. உள்ளம் துவள, விழிகள் நீரைச் சொரிந்துவிடும் போலத் துடித்தன.

'அவ்வளவு கேவலமாகவா இருக்கிறேம்?'

ராணி தலையைக் குனிந்து கொண்டு வேகமாக நடந்தாள். அவள் இதயத்தில் ஏதோ ஒன்று வலிமை பெற்றது.

(தொடரும்)

*

---

விசிறி: (சினிமா நடிகையிடம்) உங்களைத் திருமணம் முடிப்பதை எனது பெரும் பாக்கியமாகக் கருதுவேன்.

சினிமா நடிகை: மிக்க மகிழ்ச்சி, எனது கணவர்கள் பட்டியலில் உனது பெயரையும் குறித்து வைக்கிறேன்.

---

''தெய்வம் தொழ ஏற்ற மொழி ஸ்பானிஷ்; தோழமைக்குத் தகுந்த மொழி பிரஞ்சு; திட்டித் தீர்க்கப் பொருத்தமான மொழி ஜெர்மன்; காதலுக்கு இசைந்த மொழி இத்தாலி; எதற்குமே உகந்த மொழி ரஷ்யா'' இப்படிச் சொன்னவர் ஐந்தாவது சாள்ஸ்.

— எடுத்தாளன்




புடவைத் தினுசுகளுக்கு

'சிங்காரம்ஸ்'

தங்க நகைகளுக்கு

டைமா நகை மாளிகை

செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 20875




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயமே இது பொய்யடா....

**— அய்யர் —**

என் மனம் ஓர் நிலையில் இல்லை.
ஆம் அன்று உன்னைக் கண்டது முதல் ஒரு நிலையில் இல்லை.
பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகே, பகட்டு உடை உடுத்து
பள பள வென்று குவிந்து நின்றாயே.
உன் உடலின் தளதளப்பு. நீ அணிந்த உடையின் மினுமினுப்பு
அவ்வுடையை ஊடுருவும் உன் அங்கங்களின் பூரிப்பு......
இவை எனக்கு அந்த நாட்களின் நினைவுகளைக் கிளறி
விட்டன.
ஆனல்......
நீயோ கணத்தில் தோன்றிய சுவடின்றி மறைந்து
விட்டாயே. மறைந்து விட்டாயே......
அன்றும் நீ இன்று போலத்தான் இருந்தாய் கண்ணுக்கு
விருந்தாக. ஆயினும் அன்று என் மனத்தில் உன்னைக்
கண்டு கிளர்ச்சி ஏற்படவில்லை.
நான்தான் அன்று தக்காளி கன்னங்களின் தளதளப்பால்
என்னை மறந்து இருந்தேனே. உன்னைப் பற்றிய
எண்ணமே இல்லாது இருந்தேனே
ஆயினும்...... ஆயினும்...... ஆயினும்......
இன்றோ......
உன்னைக் கண்டு களிக்க வேண்டும்
ஒரு கணமாவது உன்னை என் கைகளில் அள்ளியெடுத்து
கண்குளிர, மனங்குளிர அணைக்க வேண்டும்...... உன்னை
அணுவணுவாக சுவைத்துக் கொண்டே
யிருக்க வேண்டும்.
என் அருகில் இருக்கும்போது நீ பரம், உன் உடலில்
கமழும் நறுமணத்தை நுகர்ந்து கொண்டே
யிருக்க வேண்டும் என்று ஏங்குகிறேன். ஏங்குகிறேன்......
ஏங்குகிறேன்.
அன்று என் காலடியில் கிடந்த உன்னை அலட்சியம்
செய்தேன்.
இன்று என் கண்களை விட்டே மறைந்து விட்டாயே......
நீ அகப்படுவாயோ என்ற நப்பாசையில், உன்னை
எங்கும் தேடினேன். கடைகளில், பஸ் தரிப்பு
நிலையங்களில், சந்தையில்...... இன்னும் எங்கெங்கோ
தேடிக் கொண்டேயிருக்கிறேன்.
ஆனல்...... ஆனல்...... ஆனல்......
நீயோ என்னை மறந்து, என்னிடமிருந்து நிரந்தரமாக மறைந்து
விட்டாயே......
ஆம்...... அன்று
உன்னை மறந்து அலட்சியம் செய்த எனக்கு
இதுவும் வேண்டும்...... இன்னமும் வேண்டும்
உன்னை மீண்டும் என்று காண்பேன்......
என் ஆசை வெங்காயமே உன்னை மீண்டும்
என்று காண்பேன்.

வெங்காயம் காணுத ஒரு கொழும்பாரின்
பிரலாபம்

---

★ ஒரு தத்துவஞானியும், விஞ்ஞானியும் சர்ச்சையில் ஈடுபட்டிருந்தார்கள். விவாதம் காரசாரமாக இருந்தது.

தத்துவஞானி இருட்டு அறையில் கருப்பு பூனையைத் தேடும் ஒரு குருடன். பூனையை அவன் காண்பது அபூர்வமே என்று விஞ்ஞானி காரமாகச் சொன்னர்.

அதுவென்னவோ உண்மைதான். ஆனல் விஞ்ஞானி இருட்டறையில் இல்லாத பூனையை அல்லவா தேடுகிருர். அவரிடம் அது அகப்படுவதே இல்லை. ஆனல் தேடுதல் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது என்று சூடாகப் பதிலளித்தார் தத்துவ ஞானி.

— எடுத்தாளன்

---

ஒருவர்: (பொலிஸ் நிலையத்தில்) சார்! நேற்று எனது வீட்டில் புகுந்த திருடனைப் பார்க்கணும்.

பொலிஸ்காரர்: ஏன்?

ஒருவர்: அவன் எப்பிடி என் மனைவிக்குத் தெரியாம வீட்டுக்குள்ளே புகுந்தான்னு தெரிஞ்சுக்கத் தான் சார்.

— ஜோக்கிரட்டீஸ்

---

★ ஒரு சிறந்த கடிதம் எழுதுவது சுலபம். கடிதத்தை வாசிக்கும் போது எழுதியவரே நேரில் வந்து பேசுவது போலிருக்க வேண்டும். அவ்வளவுதான்.

— ஏ. ஸி. பென்ஸன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுவர வேண்டும்

--- கவிஞர் வி. கந்தவனம்

பாட்டுவர வேண்டுமொரு
பாட்டுவர வேண்டும்
பார்புகழ வல்லவொரு
பாட்டுவர வேண்டும்
கேட்டவர்கி றுங்கிவிழும்
பாட்டுவர வேண்டும்
கேடில்விழுச் செல்வமெனும்
பாட்டுவர வேண்டும்
ஏட்டிலிடம் பெற்றுயரும்
பாட்டுவர வேண்டும்
ஈடிணையி லாதவொரு
பாட்டுவர வேண்டும்
பாட்டுவர வேண்டுமொரு
பாட்டுவர வேண்டும்
பார்புகழும் பண்புகளை
நாட்டிவர வேண்டும்

ஏற்றதமி ழின்சுவையில்
ஊறிவர வேண்டும்
எங்கள்தமி ழின்பெருமை
கூறிவர வேண்டும்
வீற்றரிய செந்தமிழிங்
காளவர வேண்டும்
மேன்மைமிகு நந்தமிழர்
வாழவர வேண்டும்
வேற்றுமைகள் தீரவழி
காட்டிவர வேண்டும்
வீரமர பின்திறனை
யூட்டிவர வேண்டும்
ஆற்றல்திட மாய்நிலை
சிறக்கவர வேண்டும்
ஆக்கமுட னேபலபி
றக்கவர வேண்டும்!

காற்றுநிலம் நீரில்நெருப்
பிற்கவியும் வானில்
காலமதை வென்றுகலந்
தார்த்துவரும் பாட்டு
ஊற்றருவி சோலைமலை
காடுகரைத் தென்றல்
ஓடியுறவாடி மகிழ்
வோடுவரும் பாட்டு
சேற்றுநிலம் காரைநிலம்
பாலைநில மெல்லாம்
நாற்றுநில மாக்கிவளம்
நல்கிவரும் பாட்டு
போற்றியிறை வன்புகழ்பொ
ழிந்துவரும் பாட்டு
பொங்கிவர வேண்டுந்தமிழ்
பூக்கவர வேண்டும்!

தேற்றமுடி யாதவரைத்
தேற்றிவர வேண்டும்
தீர்க்கமுடி யாததுயர்
தீர்த்துவர வேண்டும்
சாற்றமுடி யாப்புதுமை
சாற்றிவர வேண்டும்
சங்கநிதி பதுமநிதி
ஏற்றிவர வேண்டும்
போற்றுபவை போற்றிமிகத்
தூற்றுபவை தூற்றி
நேற்றைநிலை மாற்றியுயர்
நீதிநிலை நாட்டும்
ஆற்றலுள வான்றநலப்
பாட்டுவர வேண்டும்
ஆனகலை யானைமுகன்
ருனருளல் வேண்டும்!

அம்பலவி யான்றகொழும்
புக்கனிகள் போன்றே
ஆனபுக ழீட்டுமருங்
கல்வகைகள் போன்று
வம்பலரும் பேராத
னைப்பொலிவு போன்று
மாண்புமிகு சிவனொளியின்
வல்லநிலை போன்று
செம்பியெழும் மாவலியின்
கிளர்ச்சியினைப் போன்று
கீரிமலை யூற்றுத்தரும்
குளிர்ச்சியினைப் போன்றிவ்
அம்புவியை யாளவொரு
பாட்டுவர வேண்டும்
தும்பிமுகன் தூயவருள்
தோய்ந்துவர வேண்டும்!

—0—

★ ஒரு டன் கடதாசி செய்ய இரண்டு டன் மரத்தை வெட்டிச் சாய்க்கிறார்கள்.

— எடுத்தாளன்

உன் தலைக்கு மேலாகப் பறவைகள் பறக்கின்றனவே என்று மனதை அலட்டிக் கொள்ளாதே. அதைத் தடுக்கப் போகாதே. உன் தலை முடியில் கூடு கட்டுவதானால் கவலைப்படு; ஒழித்துவிடு.

— சீனப் பழமொழி


பிறவுண்சன்
பிஷ் மக்ஸ்
இப்பொழுது உங்கள் வளர்ப்பு மீன்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.




பிறவுண்சனின் பிஷ்மக்ஸ் மீன்களின் இயற்கை உணவாகிய 'பிளாங்ரன்' சேர்க்கப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை

— கு. இராமச்சந்திரன் —

சத்தத்தைக் கேட்ட சிவப்பிரகாசம் வாசித்துக் கொண்டிருந்த 'அரும்பை' விரித்தது விரித்தபடியே குப்புறக் கவிழ்த்திவிட்டு வாசலுக்கு ஓடிப் போனான். அவள் இன்னும் தெருவைக் கடந்துவிடவில்லை. கடந்து கொண்டுதான் இருந்தாள்.

''மாம்பழம்! ஏ...... மாம்பழம்!''

சுமார் பத்து யார் தூரத்துக்கு அப்பால் சந்து முனையை நெருங்கிக்கொண்டிருந்த பழக்காரியின் காதுக்கு எட்டும் அளவுக்கு உரத்துக் கூப்பிட்டான், சிவப்பிரகாசம்.

குரல் வந்த திசையை நோக்கிப் பின்னால் திரும்பிப் பார்த்தாள் பழக்காரி. வாசலில் நின்று கொண்டு கையால் சைகை காட்டி அழைத்த சிவப்பிரகாசத்தைக் கண்ட அவள் அவனை நோக்கி வந்தாள். தலையிலிருந்து கூடையை இறக்கும்போதே விலையையும் சொல்லி வைத்தாள்: ''ஒரு பழம் பத்துச் சதம்.''

கூடையிலுள்ள மாம்பழங்கள் வாசத்தை வாரி இறைத்துக் கொண்டிருந்தன. பழமென்றால் பத்து சதத்திற்குப் பெறுமதியானதுதான். கண்ணை மூடிக் கொண்டு காசைக் கொடுத்துவிடலாம். இருந்தாலும் விலையில் பாதியைக் குறைத்துக் கேட்டு, ஒரு வேளை அவள் சம்மதித்துத் தந்துவிட்டால், இரண்டு பழங்களைச் சுவைத்துச் சுவைத்துச் சாப்பிடலாமல்லவா?

''இந்தப் பழத்துக்குப்போய் பத்து சதம் கேட்கிறியே. ஐந்து சதம் போட்டுக் கொள்ளேன்'' என்று ஒரு போடு போட்டுப் பார்த்தான்.

''தம்பி! இந்த மாதிரிப் பழத்தை நீ பத்து சதத்திற்குக் குறைவா வாங்கிட்டா, நான் இருக்கிற பழங்களையெல்லாம் சும்மா தாரேன்'' — என்று பலமான சவாலாக விட்டாள்.

''ஐந்து சதம் போட்டுக்கோவன்'' என்று பழைய பல்லவி பாடியதுதான் தாமதம், அவள் கூடையைத் தூக்கித் தலையில் வைத்துவிட்டாள்.

''என்ன பழத்தைத் தூக்கிட்டே?''

''பிறகு தம்பி கேட்கிற விலைக்குக் கொடுக்கக் கட்டுபடியாகுமா? சொன்ன விலையிலிருந்து ஒரு சதம் குறைக்க முடியாது. வாங்குறியா இல்லை நடக்கட்டுமா?''

''சரி. ஒரு பழம் தா'' என்று சொல்லிக் கொண்டே கால் சட்டைப் பையின் அடியில் போய் கிடக்கும் பத்து சதத்தை எடுத்துக் கொடுத்தான்.

பழக்காரி ஒவ்வொரு பழங்களாக எடுத்து நசித்துப் பார்த்தாள். முகர்ந்து பார்த்தாள். இப்படியே கிண்டிக் கிளறி யெடுத்து ஏழெட்டுப் பழங்களை ஒதுக்கிவிட்டு கடைசியாக ஒரு பழத்தை எடுத்துக் கொடுத்தாள். 'தேன் போல இனிக்குமாக்கும்' என்று சொல்லிவிட்டு கூடையைச் சும்மாட்டில் இருத்திவிட்டு 'மாம்பழம்... மாம்பழம்' என்று குரல் கொடுத்துக் கொண்டே பயணப்பட்டாள்.

வீட்டுக்குள் காலடி வைத்த சிவப்பிரகாசம், பழத்தை வெட்டிச் சாப்பிடுவோமா, இல்லை கடித்துச் சாப்பிடுவோமா, என்ற மனத் தர்க்கத்தில் ஈடுபட்டுவிட்டான். கடித்துச் சாப்பிடுவதில் தான் அலாதி இன்பம் இருக்கிறது என்று ஒரேயடியாக முடிவெடுத்துக் கொண்டான். வாசலண்டை கால் வைத்தவன் கையிலிருந்த பழத்தை உடனே பின்புறமாக ஒளித்துக் கொண்டான். ஆனால், மகேஸ்வரியின் கண்களில் இருந்து அந்தப் பழம் தப்பவில்லை.

''அண்ணா, அண்ணா எனக்கு ஒரு துண்டு தாவேன்''

''நான் தரமாட்டேன் வேணுமின்னா வேறு பழம் வாங்கிக்கோ''

''எனக்குப் பழத்தின் கொட்டையை யாவது தாவேன்''

''முடியாது முடியாது முடியாது. நான் இந்தப் பழத்தை வெட்டவே மாட்டேன். கடித்துக் கடித்துச் சப்பிச் சப்பிச் சாப்பிடுவேன்.''

சிவப்பிரகாசம் முரண்டு பிடித்தானென்றால் முரண்டு தான்.

சிவப்பிரகாசமும் மகேஸ்வரியும் தர்க்கம் செய்துகொண்டிருக்கும்போது வெளியே போயிருந்த அம்மா திரும்பி வந்தாள். மகேஸ்வரி அம்மாவிடம் போய் புகார் செய்தாள்.

''பாருங்க அம்மா அண்ணே மாம்பழம் வாங்கியிருக்கிறான். ஒரு துண்டு கேட்டேன் தரமாட்டேன் என்று சொல்லுகிறான்.''

''ஏண்டா உன் தங்கை தானே. மகேஸ்வரிக்கு ஒரு துண்டு கொடேன்.'' — அம்மா வக்காலத்து வாங்கினாள்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முடியாது. வேண்டுமென்ருல் சொல்லுங்கள். சந்துக்குள்ளேதான் மாம்பழக்காரி போயிருக்கிருள். காசு தந்தால் வாங்கித் தருகிறேன்.''

''அப்படியா சரி. இந்தா பத்து சதம். ஓடிப் போய் அவளுக்கு வாங்கிக் கொடு.''

அம்மாவின் கையிலிருந்து பத்து சதத்தை வாங்கிய அவன் சிட்டாகப் பறந்துவிட்டான். எப்படியாவது தன் பங்கில் அவள் சேர்ந்துவிடக் கூடாதே என்ற எண்ணந்தான் இப்படி பறக்கடித்தது. அம்மா சமையற்கட்டுக்குள் புகுந்துவிட்டாள்.

ஒரே ஓட்டமாகச் சென்ற சிவப்பிரகாசம் மறு ஓட்டத்தில் வீட்டுக்கு வந்தான். அவன் கையில் அவன் காசு கொடுத்து வாங்கிய மாம்பழம்தான் இருந்தது.

''அண்ணு பழம் எங்கே?'' — சிவப்பிரகாசத்தைப் பார்த்து ஆவலோடு கேட்டாள் மகேஸ்வரி.

''எல்லாமே தீர்ந்து போச்சு போ'' என்று பதில் சொல்லிக் கொண்டே நடந்தவன், மகேஸ்வரி கையில் பத்து சதத்தைக் கொடுத்து அடுப்பங்கரைக்குள் போய் அம்மாவிடம் இந்த விஷயத்தைச் சொன்னுள்.

''சரி, தங்கச்சிக்கு ஒரு துண்டு கொடேன்'' என்று அம்மா சொல்லவே, எச்சில் படுத்தாமலிருந்தால், இதே நச்சரிப்பாகத்தான் இருக்குமென்று எண்ணியவன், பழத்தை நறுக்கென்று ஒரு கடி கடித்தான். மறுகணம் ''தூ... தூ...'' வென்று காறித் துப்பினுன். கையிலிருந்த பழத்தை தூர எறிந்தான். காரணம் அது அழுகிப் போன மாம்பழம்.

அம்மாவும் மகேஸ்வரியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

*



★ வாள் மீன்களில் பல வகைகள் உள்ளன. இவ்வகை மீன்களின், மேல்புறச் சொண்டு முன்னேக்கி நீண்டு, வாள் போலக் கூர்மையானதாகக் காணப்படும். இலங்கையில் பிடிக்கப்படும் முரல் மீன்களும் ஒரு வகை வாள் மீன்களே. வாள் மீன்கள் மரத் தோணிகளில் துளை போட்டுவிடக்கூடியளவு வலிமையானவை. வாள் மீன்கள் நான்கு அடியிலிருந்து பதினைந்து அடிகள் வரை நீளமானவை.

— கமலி


## வெண் நிற ஆடை

பாலிலும் வெண்மை தரும்

★ மில்க் வைற் நீல சோப்

★ மில்க் வைற் பார் சோப்

★ மில்க் வைற் சலவைப் பவுடர்

வாங்கிப் பாவித்து உறைகளை அனுப்பி

# பரிசுகளைப் பெறுங்கள்

தொலைபேசி: 7233

தந்தி: 'மில்க்வைற்'

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

கிளை: மில்க்வைற் டிப்போ, — 83, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு—13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கோண(ர்) சீற்"

--- வே. ஜே. போஸ் ---

'இண்டைக்கு அவ்வளவு சனமிராது' என்ற நினைவோடு கோட்டை புகையிரத நிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தேன். அதற்கு ஆதாரமாக எனக்கு நானே பல காரணங்களை எண்ணிக் கொண்டு சென்றேன்.

முதலாவது, இன்று கிழமை நாளாகையால் அவ்வளவு சனமிராது என்றெண்ணினேன். அடுத்தது இந்த குழப்பங்களுக்கிடையில் பிரயாணம் செய்பவர்கள் குறைவாக இருக்கும்......

இப்படியே எண்ணிக்கொண்டிருக்கையில் புகையிரத நிலையத்தை யடைந்துவிட்டேன். முன்னைய எனது எண்ணங்கள் யாவும் சிறகடித்து (பாழாகிவிட்டது.) 'ஜெட்'டில் ஏறிப் பறந்து விட்டன. யாழ். புகையிரத சேவைச் சரித்திரத்தில் இல்லாத படி அன்று 'பிளாட்போம்' டிக்கட்டுக்கே கியூவில் நின்றார்கள்.

கியூவைப் பற்றியும், டிக்கட் எடுத்தது பற்றியும் விபரிக்க இடம் போதாது. ஒருவழியாக டிக்கட்டுடன் உள்ளே நுழைந்தேன். 5-ம் மேடைக்குத்தான் யாழ் வண்டி வரும் என்பதை அங்கு நின்ற சனக்கூட்டம் எடுத்துக் காட்டியது. அவர்கள் நிற்கும் நிலை கண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டேன். தற்கொலை செய்வதற்காக புகையிரதத்தை எதிர்பார்த்து நிற்பது போல் எல்லோரும் மேடை விளிம்போடு வரிசையாக நின்றனர். முன் வரிசையில் நிற்பவர்கள் மூலை இடம் பிடிப்பதற்கே நிற்பது வழக்கம்.

எனக்கு கோணர் சீற்றில் அவ்வளவு அக்கறையில்லை (ஆச்சரியமாயிருக்கிறதா!). முன்பொரு காலம் இருந்ததுதான். இந்தக் குழப்பங்களுக்குப் பிறகு, 'தற்செயலாக வெளியிலிருந்து சுடும் போது மூலையிலிருப்பவனுக்குத் தானே முதல் பிடிக்கும்' என்ற நினைவும் ஒரு காரணம். மனைவி கடிதமூலம் இட்ட (அன்பு) கட்டளையும்கூட.

'தலையணையை கோண(ர்) சீற்றில் விழத்தக்கதாக யன்னலுக் கூடாக எறி மச்சான். நீ தானே பள்ளிக்கூடத்திலை திறமான போளர் (பந்து வீசுதல்) என்று பெயரெடுத்தனீ'' என்றொருவர் தயார் நிலையில் இருந்தார். (இவர் எறிந்த தலையணை கீழே விழுந்து மிதிபட்டதைப் பின்பு அவதானித்தேன். பாவம். இவருடைய பள்ளிக்கூடம் எத்தனை முறை தோற்றிருக்குமோ?)

''நான் மச்சான் இரண்டு வருஷமாக யாழ்ப்பாணம் போய் வாறன். இதுவரையிலும் கோண(ர்) சீற் தவறவிட்டது கிடையாது. நீ பயப்படாதை மச்சான். உனக்கு சுதியான கோண(ர்) சீற்பிடிச்சுத் தாறன்.' இது இன்னொருவரின் வீரப் பிரதாபம்.

(புகையிரதத்தில் தொங்கியேறும் போது ஒரு இளைஞன் தவறி விழுந்து காயமடைந்திருப்பதாகப் பின்பு ஒரு சலசலப்பு ஏற்பட்டது. ஒரு வேளை இவர்தானோ தெரியாது. இறங்கினால் இடம் போய்விடும் என்பதால் ஆளை யறிய முயற்சிக்கவில்லை.)

''உவ்வளவு சனமும் கோண(ர்) சீற் பிடிக்கிற தெண்டு தான் நிற்குது. ஆனால் அதற்கொரு கெட்டித்தனம் வேணும். இண்டைக்கு உங்களுக்கு ஒன்றல்ல, இரண்டு கோண(ர்) சீற் பிடிச்சுத் தாறன் பாருங்கோவன்.'' இது இன்னொரு விறிசு இரண்டு இளம் பெண்களைப் பார்த்துச் சொன்னது.

எனக்குள் ஒரு சிந்தனை. முன்பொரு காலத்தில் புலிப்பல் கொண்டு வருபவனுக்குத்தான் பெண் கொடுக்கும் வழக்கம். கொழும்பு மாப்பிள்ளையாயிருந்தாலும் கோண(ர்) சீற் பிடிக்கத் தெரிந்த மாப்பிள்ளைக்குத் தான் பெண் கொடுக்கப்படும் என்று ஒரு நிபந்தனை இந்தக் காலத்தில் வைத்தால் நல்லது.

திடீரென்று ஏதோ ஆரவாரம். ஓகோ... புகையிரதம் வந்து விட்டது. மூலைக்குள் இருப்பதற்காக முண்டியடித்தது சனம். அனுபவசாலிகள் பலர் மருதானையிலிருந்தே கோண(ர்) சீற் பிடித்துக் கொண்டு வந்தனர். அவர்கள் முகத்தில் வீரக்களை கொட்டியது. ஒரு வழியாக உள்ளே நுழைந்த எனக்கு இருக்க ஒரு சீற் கிடைத்தது. உட்கார்ந்துகொண்டேன்.

''பாய்ந்தேறினன் மச்சான். அருந்தப்பு. நான்தான் முதல் இந்தப் பெட்டிக்குள்ளை வந்தது. இந்த விசயத்திலை என்னை அசைக்கேலாது.'' இது ஒரு கோண(ர்) சீற் எக்ஸ்பேர்ட் கூறியது.

''இவ்வளவு சனத்துக்கை கோண(ர்) சீற் எடுக்கிறது கஷ்டம். இருந்தாலும் எங்களுக்குக் கிடைச்சிட்டுது''

''இடிபட்டு ஏறயிக்கை கையிலை உரஞ்சிப் போட்டுது'' போர்வீரனுக்கு அவன் தழும்பு கள்தான் அணிகலன் என்று கேள்விப்பட்டுள்ளேன். கோண(ர்) சீற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிலுள்ள ஒரு வீரர் மற்ற வீரருக்குக் காட்டிக் கொண்டிருந்தார். அருகிலுள்ளவர்கள்; பக்கத்து வீட்டுக்காரனின் மனைவியின் கழுத்திலுள்ள நகைகளைப் பார்த்துவிட்டும் மனைவிக்குத் தெரியாமல் மறைப்பதற்காக பார்க்காதது போல் பாவனை செய்வது போலிருந்தது. சிலருக்கு, பக்கத்து வீட்டுக்காரனுக்கு வெங்காயம் கிடைத்தது போலிருந்தது.

இவற்றிற்கிடையில், இன்னொரு மூலைக்குள் பலத்த சலசலப்பு காணப்பட்டது. எல்லோரும் அந்தத் திக்கில் திரும்பினர்.

''மரியாதையா இடத்தை விடும்.''

''உதுக்கு வேறை யாரையும் பாரும். நான் முதல்லையே பிடிச்சிட்டன்.''

''நான் கால் வைச்சுக் கொண்டு வந்தது உமக்குத் தெரியவில்லையோ. இடத்தை விடப் போறீரோ... இல்லை...''

''விடாட்டி என்ன செய்வீர்? ஏதோ உமக்குச் சீதனம் எழுதித் தந்த மாதிரி யெல்லோ கதைக்கிறீர்.''

பளார் என்று ஏதோ கேட்டதும் சற்று எழும்பி நின்று பார்த்தேன். ஆனை ஆள் சேட்டுகளில் பிடித்து பிணைபட்டுக் கொண்டு நின்றார்கள். முதலில் அடித்தவரின் மனைவி ''அடியாதையுங்கோ...விடுங்கோ...'' என்று தன் வீர புருஷனைத் தடுத்துக் கொண்டிருந்தா.

அருகிலுள்ளவர்கள் தடுத்து ஒருமாதிரி அமர்ந்துவிட்டது. தனக்கும் மனைவிக்குமாக இரண்டு கோண(ர்) சீற் பிடித்தபொழுது. ஒன்றில் தான் இருந்து கொண்டு மற்றதில் காலைப் போட்டுக் கொண்டு இருந்திருக்கிறார். அதில் இன்னொருவர் உட்கார்ந்துவிட்டார். இதுதான் சாராம்சம். தங்கள் முறைப்பாடுகளை இருவரும் மற்றவர்கட்கு ஒப்புவித்துக் கொண்டிருந்தனர்.

ஒரு சாரக் கூட்டம் உள்ளே புகுந்தது.

''ஒய்... யென்னங் கறச்சல் குடுக்கிறது. அவரு வைவ் ஓட வந்தது தானே. எழும்பு... எழும்பு வேற இடத்தில போய்யா......'' இது சாரக் கூட்டம் அடி வாங்கியவருக்கு இட்ட கட்டளை. மேலும் பயறுத்தியதால் அவர் (சற்று நேரத்திற்கு முன்பு தன் இனத்தவருடன் இறுமாந்தவர்) விருப்பமின்றி எழுந்து செல்ல முயன்றார். சாரக் கூட்டம் இறங்கிச் சென்றதும் பழையபடி அமர்ந்துவிட்டார். இந்தக் கோண(ர்) சீற் சண்டையை எண்ணிச் சிரிப்பதா? அல்லது கோணலான எமது இனத்தின் மனப் பாங்கை எண்ணிச் சிரிப்பதா?

முன்னைய தமிழர் இலக்கியங்களிலோ வரலாறுகளிலோ, மூலைக்கும் தமிழர் பண்பாட்டுக்கும் ஏதாவது தொடர்பிருக்குமோ என்று என் மனம் ஒரு சிறிய ஆராய்ச்சியை நாடியது. இன்னுமொரு சுவையான சம்பவம் அதன் அவசியத்தை எடுத்துக் காட்டியது.

அண்மையில் புகையிரத சேவை இல்லாத போது விமான சேவை கூடுதலாக நடத்தப்பட்டதல்லவா? நானும் ஒரு முறை (முதன் முதலாக) விமானத்தில் சென்ற பொழுது கேட்ட உரையாடல் இது:

''மச்சான் எனக்குக் கோண(ர்) சீற்றைத் தாவன். நான் இதுதான் இதுதான் முதல் முறையடாப்பா.''

''உதை மாத்திரம் கேட்காதை. நான் இதுக் கெண்டு தான் பாய்ஞ்சு விழுந்து வந்து பிடிச்சனான். நானும் இதுதான் முதல்முறை.''

மூலைக்கும் நமது முன்னோர் பண்பாட்டுக்குமுள்ள தொடர்பை ஆராய வேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். இப்பொழுதும் கோண(ர்) சீற் ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. நல்ல முடிவுகள் கிடைத்தால் 'சிரித்திரன்' மூலமாக உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

*



ஒருத்தி: கோயிலில் நீ என்ன நினைத்துக் கும்பிட்டாய்?

மற்றவள்: எனக்கு விழுந்து கும்பிடத் தெரியாது. என்னை மன்னிக்கும்படி வேண்டினேன்.

ஒருவர்: காலமான உனது தந்தை உனக்கு பணம் எதுவும் வைத்துவிட்டுப் போகவில்லை. விழுந்து விழுந்து பணம் சேர்த்தாரே.

பையன்: இல்லை, அவர் உடம்பைக் கவனியாமல் பணம் உழைத்தார். நோய் பிடித்துவிட்டது. பின்னர் நோயை மாற்றுவதற்காக பணம் முழுவதும் செலவாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை நாடகம்

# யாருக்கு அதிஷ்டம்?

( கே. எஸ். பாலச்சந்திரன் )

பாத்திரங்கள்: ஜெயராஜ் (நாடகக் கதாநாயகன்)
குமுதா (நாடகக் கதாநாயகி)
சிங்காரம் (நாடகத்தில் மட்டுமல்ல ஜெய ராஜிற்கு வாழ்க்கையிலும் வில்லன்)

(முதற் காட்சி)

[நாடக ஒத்திகைக்கென்று கதாநாயகி குமுதா வந்து காத்திருக்கிருள். சிறிது நேரத்தின் பின் கதாநாயகன் ஜெயராஜ் வருகிருன்.]

ஜெய: ஹலோ குமுதா! என்ன இன்னிக்குத் தனியாகத்தான் றிகேர்சலுக்கு வந்திருக்கிருய் போலிருக்கே...

குமு: ஆமா... அது சரி எதுக்கு அப்படிக் கேட்கிறீங்க...

ஜெய: இல்லே... ஒன்றுமில்லே... உன்கிட்ட தனியாகக்கொஞ்சம் பேச வேண்டியிருக்கு... மத்தவங்களும் இன்னும் வரல்ல......அதான்......

குமு: என் கிட்டயா... அதுவும் தனியாகவா...... அப்படி என்ன விஷயம்...

ஜெய: (அசடுவழிய) அதை எப்படிச் சொல்றதென்றுதான் யோசிக்கிறேன்...

குமு: கஷ்டமாயிருந்தா ஒண்ணு செய்யுங்க...... சொல்லாம விடடுடுங்களேன்...

ஜெய: (பதட்டத்துடன்) என்ன... இல்லே நான் சொல்லிவிடறனே... (சமாளித்துக் கொண்டு நாடகபாணியில்) குமுதா...... என் இதயத்தில் நீங்காத இடத்தைப் பிடித்துவிட்டாய் நீ. உன் தாமரை வதனமும், கயல் விழிகளும், பிறை நுதலும்...... ஆகா... ஆகா...

குமு: (கேலியாக) ஆமா...... இந்த டயலாக்கெல்லாம் எங்க நாடகத்திலே முந்தி இருக்கவேயில்லேயே...

ஜெய: (அதே நாடகபாணியில்) உன் வேடிக்கைப் பேச்சால், புண்பட்ட என் இதயத்தை மேலும் குத்தாதே குமுதா. சம்மதம் என்று சொல். என் சாம்ராச்சியத்திற்கே உன்னை ராணியாக்குவேன்... சொல் குமுதா...

குமு: என்ன மிஸ்டர் ஜெயராஜ்... அடுக்கிகிட்டே போறீங்க... குடியிருக்கிறது கார் ஷெட்லே... அதுவும் வாடகைக்கு...... சாம்ராச்சியம் எங்கேயிருக்கு......

ஜெய: (நாடகபாணியில்) என்ன குமுதா...... குழந்தை போல் பேசுகிருயே... இன்னுமா உனக்குப் புரியவில்லே. நான் உன்னைக் காதலிக்கிறேன் குமுதா... உயிருக்குயிராய்க் காதலிக்கிறேன்...... என்னை ஏற்றுக்கொள்வாயா... சொல் குமுதா...

குமு: ஆனல் மிஸ்டர் ஜெயராஜ்...... அதற்கு ஒரு தடையிருக்கே...

ஜெய: என்ன தடை சொல் குமுதா...... எதுவானலும் அவற்றையெல்லாம் பொடிபொடியாகத் தகர்த்தெறிந்து உன் கரம் பற்றுவேன்.

குமு: பெரிதாயொன்றுமில்லே... நான் உங்களைக் காதலிக்கவேயில்லே...... அந்தத் தடைதான்......

ஜெய: அப்படியானல் என்னோடை கதாநாயாகியாய் நடிக்கும்போது காதல் வசனங்களை யெல்லாம் உணர்ச்சியோட பேசிறியே...

குமு: அது நடிப்பு...... நாய் வேஷம் போட்டா குரைக்கத்தானே வேணும்.

ஜெய: என் சட்டைப் பொத்தானைப் பிடித்து அத்தான் என்று அன்போடு கூப்பிடுவாயே... அதுவும் நடிப்பா...

குமு: டைரக்டர் சொன்னர்... நான் செய்தேன். ஆன நான் பட்ட வேதனை யாருக்குத் தெரியும்?

ஜெய: சொல் குமுதா. உன் வேதனை எனக்குச் சோதனை.

குமு: உங்க எட்டுக்கால் பூச்சி மீசையையும், தூக்கிவிட்ட தட்டிக் கடைப் பல்லேயும், குழி விழுந்த கண்ணையும் பார்த்து காதல் வசனம் பேசச் சொன்ன... அது நரக வேதனை யில்லையா...

ஜெய: (கோபமாக) நீ மட்டும் பெரிய அழகுராணி என்ற நினைப்போ...... போதும் நிறுத்து... எனக்கு இப்ப புரியுது. நீ அந்த வில்லன் பயல் சிங்காரத்தைத் தான் காதலிக்கிருய் என்று நான் அப்பவே நினைச்சேன்...... வரட்டும் அவனுக்குச் சரியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் படிப்பிக்கிறேன்... சண்டை போடற சீன்லை நிஜமாகவே உதைக்கிறேன்... ம்

குமு: மிஸ்டர் ஜெயராஜ்! அனாவசியப் பேச்செல்லாம் வேண்டாம். நான் உங்களை விரும்பல்லை. அந்த எண்ணத்தை அடியோடு மறந்திடுங்க. ஆமா.

(குமுதா கோபத்துடன் போகிறாள்)



ஜெய: (பரிதாபமாக) எங்க போறாய் குமுதா? இதையெல்லாம் போய் டைரக்டர் கிட்ட சொல்லிடாதே. நான் சும்மா விளையாட்டுக்கில்லே சொன்னேன்...... என்ன... (தனக்குள்) கஷ்டகாலம்... இவள் போய்ச் சொன்னா கதாநாயகனா நடிக்கக் கிடைத்த ஒரேயொரு சான்சும் போயிடும். எல்லாத்துக்கும் இந்த வில்லன் சிங்காரம்தான் காரணம். நாடகத்தில்தான் எனக்கு வில்லன். வாழ்க்கையிலும் வரணுமா பாவிப்பயல்?

## இரண்டாம் காட்சி

[கதாநாயகன் ஜெயராஜ் கவலையுடனிருக்க வில்லன் சிங்காரம் வருகிறான்.]

சிங்: என்ன கதாநாயகன்! ஒரே யோசனை போலிருகே... என்ன விஷயம்...?

ஜெய: (கோபமாக) இப்ப அதெல்லாம் சொல்லித் தான் ஆகணுமா...?

சிங்: இந்தா ஜெயராஜ்... என் கிட்ட அதெல்லாம் வைக்காத... நாடகத்திலே வேணும்னா நீ அடிக்கிற மாதிரி நடிக்க நான் வாங்கிக்குவேன்... ஆனா இங்கே மாறி நடக்கும். ஆமா...

ஜெய: சும்மா இருக்கிற என்னை ஏன் வம்புக்கிழுக்கிறே...உன் வேலையைப் பார்த்துகிட்டு போவியா...

சிங்: ஓகோ! இப்ப புரியுது. நாடகத்திலே உன்னுடைய காரெக்டரை மாத்தினதைப் பற்றி டைரக்டர் உன் கிட்ட சொல்லிட்டாரோ...

ஜெய: என்ன... காரெக்டரை மாத்தினதா... அப்ப நான் கதாநாயகன் இல்லியா...

சிங்: சரியான ஆளுப்பா நீ. இந்தக் கதையிலே வர்ற கதாநாயகனுக்கு உன்னை விட பொருத்தமான ஆள் கிடைப்பானா?

ஜெய: அப்படீன்னா நானும் குமுதாவும் நடிக்கிற காதல் சீனை வெட்டச் சொல்லியிருப்பே. நீ செய்வேன்னு நான் அப்பவே நினைச்சேன்.

சிங்: ஏதோ வெல்லாம் நினைச்சு மனதைக் குழப்பிக்காதே. காதல் சீன் ஒரு டயலாக்கூட விடாமல் அப்படியேயிருக்கு.

ஜெய: அப்ப நீ என்னதான் சொல்றே... காரெக்டர் மாத்தினதா சொன்னியே...

சிங்: பெரிசா மாற்றமொன்றுமில்லை. குமுதா ஒரு மனநோய் டாக்டராக நடிப்பா. நான்தான் அவளோடை அண்ணன்.

ஜெய: அப்ப நான்...

சிங்: நீ குமுதா வேலை பார்க்கிற ஆஸ்பத்திரியிலே உள்ள ஒரு நோயாளி.

ஜெய: அப்படின்னா எனக்கு பைத்தியக்கார வேஷமா...?

சிங்: பொறேன்... உன்னுடைய பைத்தியம் தீர உன்மேலே காதல் கொண்டவ மாதிரி குமுதா, அதாவது மனநோய் டாக்டர் நடிக்கிறா... காதல் வசனம் பேசறே நீ...

ஜெய: அத்தோட எனக்கு பைத்தியம் தீர்ந்திடறதா...

சிங்: தீர்ந்திட்டால் நாடகமே அத்தோட தீர்ந்திடுமே...... கடைசிவரை உனக்கு பைத்தியம் சுகமாகவே இல்லை. ஒண்ணுமே பலிக்காத நிலையில் தான் நான் வரவழைக்கப் படுறன்...

ஜெய: நீ யெதுக்கு...? டாக்டருடைய அண்ணன் ஏன் அங்கே வரணும்?

---

## "நோயர் கடிதம்"

ஒரு பத்திரிகைக்கு விஷயதானம் செய்பவர் "நோயர் கடிதம்" என்று மகுடமிட்டுக் கட்டுரைகள் எழுதி வந்தார். அது சரியா? பிழையா? அல்லது அச்சுப் பேயின் விளையாட்டா?

— ச. ரா. பா.

(விடை: 31-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்: என்னப்பா... முட்டாளா யிருக்கிறியே? சண்டை சீன் ஒன்று இருக்க வேணுமே யென்று தான் டைரக்டர் என்னை அங்கே வரவழைக்கி றார். புரிஞ்சுதா?

ஜெய: (திருப்தியுடன்) அப் பாடா...... சண்டை சீன் இருக்கா... அப்ப நான் கதா நாயகன் அடிக்க நீ வாங் குவே இல்லியா...

சிங்: அது பழைய கதையிலே தான் அப்படி வருது...... இதுலே நான் உன்னை மரத் தோட கட்டி வைத்து சவுக் காலே அடிக்கிறேன்.

ஜெய: (பயத்துடன்) எதாலே?

சிங்: சவுக்காலே அடிக்கிறேன்.

ஜெய: நான் வர்றேன். (ஓடுகி றான்)

சிங்: ஏய் எங்கே ஓடுறே...... டைரக்டர் சண்டை சீன் றிகேர்சல் பார்க்க இப்ப வரு வாரு...... எங்கேயும் போயி டாதே... (தனக்குள்) நோஞ் சான் பயலுக்குக் காதல்... அதுவும் என் இதயராணி குமுதா மேலே... வரட்டும். சண்டை சீன்லே ஒவ்வொரு எலும்பாய் எண்ணி எண்ணி உடைக்கிறேன்...

## மூன்றும் காட்சி

[ஒத்திகை நடக்குமிடத்திற்கு குமுதா வருகிறாள்]

சிங்: வா குமுதா வா... என்ன இப்பதான் வாறியா...

குமு: ஆமா... (தயக்கத்துடன்) மிஸ்டர் சிங்காரம் உங்க கிட்ட

சிங்: (ஆவலுடன்) சொல் குமுதா... வெட்கப்படாமல் சொல்... என் கிட்ட என்ன வெட்கம்...

குமு: (தயங்கியவாறு) உங்க கிட்ட ஒரு முக்கியமான விஷ யம் சொல்ல வேணும் என்று நான் பல நாளாகவே நினைச் சிருக்கேன்... ஆனா சொல்ல முடியாமல் போயிட்டுது...

சிங்: புரிகிறது குமுதா...... உன் உள்ளத்தைத் திறந்து உன் ஆசைகளை என் கிட்ட சொல்ல நீ துடித்திருக்கி றாய். நான் மடையன் போல புரியாமல் இருந்துவிட் டேன்...

குமு: மற்றவர்கள் அறிந்தால் ஏதாவது தப்பாக நினைப் பார்கள் என்றுதான்.

சிங்: உண்மைதான் குமுதா. ஊர் எதையும் பேசும்... ஆனால் என்கிட்ட மறைக்கா மல் சொல்லியிருக்கலாம் அல் லவா... பரவாயில்லே இப்ப சொல்லேன்...

குமு: உங்ககிட்டே சொல்லா மல் வேற யார்கிட்டே சொல்லப் போறேன்...

சிங்: அதானே... நானும் அந்த ஜெயராஜ் பயல் ஏதோ சொல்லித் திரியிறானே... நீ அவனைத்தான் காதலிக்கி றாயோ என்று தப்பாய் நினைச்சுட்டேன்.

குமு: சே... போயும் போயும் அவரையா... அந்த ஆள் அன்னிக்கு யாருமில்லாத சமயத்திலே என்கிட்ட வந்து ஏதோவெல்லாம் சொன் னார்...

சிங்: என்ன சொன்னவன் அந் தப் பயல்... அவனை எலும்பு எலும்பாய்...

குமு: நீங்க அப்படியொன்றும் சண்டைக்குப் போயிடாதீங்க...... அப்புறம் எப்படி என் கல்யாணத்தை நடத்தி வைக்கிறதாம்...

சிங்: அதுதான் யோசிக்கிறேன். (அதிர்ச்சியடைந்து) அ...... என்ன நான் உன் கல்யா ணத்தை நடத்தி வைக்கி றதா... நீ என்ன சொல்றே.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமு: நான் முழுக்கச் சொல்ல நீங்கதான் விடவேயில்லையே... நானும் யோகநாதனும் ஒருவரையொருவர் உயிருக்குயிராய் நேசிக்கிறோம். நீங்க எனக்கு அண்ணனில்லாத குறையைத் தீர்த்து வைத்து எங்க திருமணத்தை நடத்தி வைக்க வேணும்.

சிங்: (அதிர்ச்சி நீங்காமல்) நீ... காதலிக்கிறது... கதாநாயகனுடைய அப்பாவை...அ...

குமு: அப்பாவாக நடிக்கிறாரே யொழிய அவர் வயதில் இளையவர்தானே. அது சரி நீங்க என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறீங்க.

சிங்: (சமாளித்து) சே... ஒன்றுமில்லை. எப்ப திருமணம்?

குமு: வருகிற மாதம் முருகன் கோவிலில் நடத்துவதாக யோசிச்சிருக்கிறோம். நீங்க முதல் நாளே எங்க வீட்டுக்கு வந்திடணும்.

சிங்: [பெருமூச்சுடன்] நிச்சயமா வர்றேன். நீ போ. [தனக்குள்] நானும் கதாநாயகனும் ஒருத்தருக்கொருத்தர் சண்டைபோட்டுக் கொண்டதுதான் மிச்சம். அதிஷ்டம் அடிச்சிருக்கு கதாநாயகனோட அப்பனுக்கு...ம்.

[ முடிவு ]

—0—

# பல்கேரிய விகடன் பீட்டர்

தொகுத்துத் தமிழாக்கியவர்: **கே. கணேஷ்**

தென்னாலிராமன், அவந்தி, அந்தரே, நஸ்ருதின் போன்ற விகடர்கள் பல நாடுகளிலும் இருந்திருக்கின்றனர். அவர்களின் நொடிப்புகளும், சாதுர்யப் பதில்களும் அவ்வக் காலத்தில் நிலவிய அதிகாரி மமதைகளையும், மூடப் பழக்க வழக்கங்களையும் கேலி செய்வதாகவுள்ளன. பல்கேரிய நாட்டின் பீட்டர் அத்தகையதோர் இனத்தைச் சேர்ந்தவன். அவனைப் பற்றிய நாடோடிக் கதைகள் பல்கேரியாவில் அன்றாட வழக்கில் பேசப்பட்டும் எடுத்தாளப்பட்டும் வருவன.

## மீனோடு பேசிய பீட்டர்

ஒரு கிராமத்தில் மீன் கடைக்காரன் கூடை நிறைய மீனை நிரப்பி விற்பனைக்கு வைத்திருந்தான். மீன் வாங்குவதற்காக கிராம மக்கள் கடையில் குழுமினர். பீட்டரும் அங்கு சென்றான். மீன் நல்லதா கெட்டதா என அவன் அறிய விரும்பினான். மீன் ஒன்றைக் கைகளில் தூக்கி முதலில் தன் வாயருகிலும் பின்னர் தன் காதருகிலும் தூக்கிப் பிடித்தான்.

''அந்த மீனை என்ன செய்கிறாய் பீட்டர்?'' என்று ஊரார் கேட்டனர்.

''நான் கடலிலிருந்து அண்மையில் கிடைத்த செய்திகளைக் கேட்டறிந்தேன்.''

''அது என்ன கூறியது?''

''ஒன்றும் புதிய தகவல் இல்லை. ஏழெட்டு நாளைக்கு முந்திய செய்திகளைத் தான் அறிவேன் என்றது.''

## காணமற் போன கழுதை

ஒரு நாள் பீட்டரின் கழுதை காணமற் போய்விட்டது. உடனே அவன் சந்தைவெளியில் போய்

''எனது கழுதையை யார் கண்டுபிடித்துத் தருகிறார்களோ அவர்களுக்கு அதைச் சேணம், கடிவாளம் உட்பட சகலத்துடன் தந்துவிடுகிறேன்'' என அறிவித்தான்.

அறிஞர் நஸ்ருதின் ஹோஜா இதைக் கேள்விப்பட்டு அவனிடம் ''நீ கழுதையைக் கொடுத்துவிடுவதாக இருந்தால் அதைத் தேடுவானேன்? அதைக் கண்டுபிடிப்பதும் பிடிக்காததும் ஒன்றுதானே'' எனக் கேட்டார்.

''அதுதான் தவறு ஐயா! அதைக் கண்டுபிடித்துவிட்ட மகிழ்ச்சியை நான் அடையலாமே! சந்தோஷமடைவது என்ன எளிதில் கிடைக்கும் பொருளா?''

—0—

போட்டோ ரெக்ஸ்
10, அப்துல் ஜப்பார் மாவத்தை
கொழும்பு 12
போன்: 35237-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிமயமாக இருக்க



ஏன் உன் கணவர் கோபித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்?

'ஜெகஜோதி' பற்பொடி வேணுமாம். கடைக்குப் போய் அதை வாங்கி வந்து பல் தேய்த்த பிறகுதான் காப்பியே சாப்பிடுவாராம்.



ஆசிய ஜோதி யார்?

பண்டித ஜவஹர்லால் நேரு

வெறிகுட்! ஜெகத்துக்கே ஜோதி?

பற்களை தூய்மையாக வைத்து வெண்ணிறப்படுத்தி உறுதிப்படுத்தும் ஜெகஜோதி பற்பொடியே!

சபாஷ்! நூறு மார்க்குகள்.



''குருதேவா தங்கள் ஆன்ம ஜோதியை ஜொலிக்கச் செய்ய குருதெனிய ஜெகஜோதியைக் கொண்டுவந்திருக்கிறேன் பிரபோ!''

கொண்டுவா இங்கே!

இன்றுதான் என் தவத்தின் பயனை அடைந்தேன்.



ஆகா! என்னே உன் அழகு தக்காளிப்பழ மேனி, மூன்றும் பிறை நெற்றி, மயக்கும் விழி! முத்துப்போன்ற பல் வரிசை.

அப்படியல்ல என் கண்ணுளா ஜெகஜோதி பற்கள் என்று சொல்லுங்கள்.



என்ன உங்கள் வயது 102 என்கிறீர்கள் அதெப்படி? ஒரு பல்கூட விளாமல் உறுதியாக இருக்கின்றது. சொல்லும் சுத்தமாக இருக்கின்றது.

'ஓ'...அதுவா நான் உபயோகிப்பது ஜெகஜோதி பற்பொடியை. அதுதான்பல்லையும் காக்கும் உயிர்த் தோழன்.



முதலாளிகிட்ட போய் பல்லைக் காட்டினால் சம்பளம் கூட கொடுப்பார்னியே திட்டு தான் கிடைச்சது போ!

ஐய்ய! உன் காவி படிந்த கரை படிந்த பல்லையா காட்டுவது? ஜெகஜோதி பற்பொடியைப்போட்டு நல்லாத் தேய்ச்சு விட்டுப் பிறகு போய்ப் பார்.

# ஜெகஜோதி அன் கொம்பனி

**குருதெனியா, கண்டி.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாத்திரைக் கதை

### மானம்

தோட்டத்தின் ஒரு புறத்தே புற்கள் அடர்ந்து வளர்ந்திருந்தன. வருவோர் போவோரெல்லாம் புற்களை மிதித்து நடந்தார்கள். புற்கள் மிதிபட்டு அமுந்தி வாழ்ந்தன.

புற்கள் மத்தியில் நெருஞ்சிப் புல் ஒன்று தோன்றியது. மிதிக்க வந்தவர்களின் கால்களைத் தனது முள்ளால் குத்தி அவர்களோடு போராடியது நெருஞ்சிப் புல். நெருஞ்சிப் புல்லிடம் குத்து வாங்கியவர்களெல்லாம் காலை இழுத்துக்கொண்டு வேதனையோடு ஓடினார்கள்.

நெருஞ்சிப் புல்லை நினைக்க சாதாரண புல்லுக்குப் பயமாக இருந்தது. அது நெருஞ்சிப் புல்லைப் பார்த்து ''உனக்கு என்ன பைத்தியமா? அவர்களுக்குக் கோபம் வந்து உன்னைப் பிடுங்கி எறிந்தால் நீ அநியாயமாகச் செத்துப் போவாயே!'' என்று பதட்டத்தோடு கூறியது.

நெருஞ்சிப் புல்லோ அலட்சியமாகச் சிரித்தது. பின்பு அது நெஞ்சை நிமிர்த்திச் சொல்லிற்று:- ''வாழ்வதானால் மிதிபடாமல் வாழ வேண்டும். இல்லையானால் செத்துப் போக வேண்டும்.''

— காசி ஆனந்தன்

ஜோசியர்: இந்த சாதகருக்கு உருளும் காலம், பிரளும் காலம், தவழும் காலம் ஆரம்பமாக இருக்கிறது.

வந்தவர்: என்னய்யா உளறுகிறீர். நீர் நினைக்கும் மாதிரி இது குழந்தையின் சாதகமில்லை. இது என் சாதகம்.

ஜோசியர்: அப்படியானால் நீங்கள் சினிமாவில் சண்டைக் காட்சியிலும் காதல் காட்சியிலும் நடிக்கப் போகிறீர்கள்.

— ச. ரா. பா. —

(27-ம் பக்க விடை)

### சரிதான்

கட்டுரை ஆசிரியர் ஒரு வைத்தியப் பகுதியை நடத்துபவர். புதுமையாகத் தலையங்கம் இருப்பதை விரும்பி அப்படிச் செய்தார்.


நண்பன்: மனைவி ஊருக்குப் போயிட்டா மற்றவங்க இளைச்சிடுவாங்க. நீ என்னென்ணு மகிழ்ச்சியாய் இருக்காய். உடம்பும் தளதளண்ணு இருக்கே.

மற்றவர்: ''மெரினா ஹோட்டேல்'' இருக்கும் போது மகிழ்ச்சிக்கு என்னையா குறைவு?

இன்றே விஜயம் செய்யுங்கள்

மெரினா ஹோட்டேல்

7, செட்டியார் தெரு,
கொழும்பு-11

# ★ பின் சிரிப்பு ★



மனைவி: [பெருமையாக] பார்த்தீர்களா? "பொன்னுக்குத் தங்க மனசு" என்று பெண்களின் மனசைத் தங்கமாக வைத்துப் பாடியிருக்கிறதை.

கணவன்: போடீ பைத்தியம். அப்படியல்ல. உன்னைப் போல பெண்கள் அம்மா வீட்டிலேயே மாசக் கணக்கில் தங்கிவிடுவதால் தங்க மனசு. ஆனல் வர மனசு இல்லை என்று தான் பாட்டின் அர்த்தம்.

— ச. ரா. பா.



ஒருவர்: உன்னுடைய மகன் ஜி. சி. ஈ. பரீட்சை பாசா?

மற்றவர்: அவன் பரீட்சை எடுக்கவில்லையே? ஏன் நீங்கள் அக்கறையோடு கேட்கிறீர்கள்.

ஒருவர்: என்னுடைய மகன் எட்டு கிறடிற்றேடு சித்தியடைந்திட்டான். அது தான் கேட்டேன்.

— மேனகை

ஒருவர்: எனக்கு தூக்க மாத்திரை தாருங்கள் டொக்டர்.

டொக்டர்: எதற்கப்பா?

ஒருவர்: எனக்கு ஆபீஸில் நித்திரை வருகிறதில்லை!

— யோஜனு

*



ஒருவர்: ஏண்டா அந்தப் பெண்ணைத் திருமணம் செய்ய மறுத்துவிட்டாய்?

மற்றவர்: அவளுக்குச் சமைக்கத் தெரியும். நாகரிகம் இல்லாதவள்.

— ஜோக்கிரட்டீஸ்

*



ஒருவர்: இப்போ முன் போல எங்கள் வீட்டில் எலிகளின் தொந்தரவு இல்லை.

மற்றவர்: பூனை ஏதாவது வளர்க்கிறீர்களா?

ஒருவர்: அதெல்லாம் இல்லை. என் மனைவி வயலின் கற்கிருள்.

— அதிமதுரம்

## வண்டியும் மாடும்



எமது "கிறுக்கு" ஓவியரின் கிறுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னை அழகுபடுத்த இவ்வளவு அழகு சாதனங்கள் ஏன்?
சீமா சாரி ஒன்று அணிந்தால் போதுமே."



சிந்தெட்டிக் ஆடை வகைகளில்

நாங்கள் பெருமையுடன் அளிக்கும் புதிய படைப்புகள்

சீமா சாரிகள் மற்றும்

நங்கையர் அணியும்

நாகரீக ஆடைகள்

# சீமா சில்க் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்.,

திருநெல்வேலி யாழ்ப்பாணம்

தந்தி: சீமாசில்க் தொலைபேசி: 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம்:- கியூபீ59/300




மணமகன்: கல்யாண வாழ்த்துப் பத்திரத்தில் என்ன எழுதியிருக்கு?

மணமகள்: முயல் மார்க் நூல் போல் நூறுண்டு காலம் வாழ வாழ்த்தியிருக்கிறார்கள்.

முயல் மார்க் நூல் தரமானது உரமானது

வானவில் வர்ணங்களில் வகைவகையான "முயல் மார்க்" தையல் நூல்களை எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,

கொழும்பு-12.


67, பிறவுண் வீதியில் வசிக்கும் இ. சிவஞானசுந்தரம் அவர்களால், 234, கே. கே. எஸ். வீதியிலுள்ள ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org